
# அறப்போர்

ஆசிரியர் : அரங்கண்ணல்

7-7-61 ] :-: [விலை 16 [illegible]



# 60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

ஸ்ட்ரெய்சர் எனு பெயர் கொண்ட பெரும் வெறியன் தான் அந்த எழுத்தாளன்! எழுத்தாற்றல் மிக்கவன். அவனுடைய பத்திரிகையை எடுத்துப் படித்தால் கவிதை நடை வழியுமாம். காண்போரைக் கவருமாம். துடிப்புள்ளும் அந்த எழுத்துக்களைக் கொண்டு அழியாத இலக்கியங்களை அவன் உருவாக்கியிருக்கலாம்!! வெறிகொண்டவர்களுக்கு அந்த ஆசை எப்படிவரும்? அதனுல் தன்னுடைய ஆற்றல் முழுவதையும் யூதர்களுக்கெதிராக ஒரு இயக்கம் உருவாகவே பயன்படுத்தினுன். ஹிட்லருடைய வெறுப்புத்தீ வளர மிக மிகக் காரணம் இந்த ஸ்ட்ரெய்சருடையஏடு தான்! இவன்பத்திரிகையை படிப்பதும், அதைப்போல யூதர்களைக் கொடுமை படுத்துவதும், தேசீயக் கடமைகளில் ஒன்றெனக் கருதலாயினர் ஜெர்மானிய வாலியர்கள்.

பொய்யை மிகத் திறமையாக உண்மையைப்போல் எழுதுவானும், இவன். ஒருசமயம் பத்து வயதுப் பையன் ஒருவன் இறந்துவிட்டான்! அதற்குக் காரணம் யூதப் பிசாசுகள் என்று கட்டிவிட்டான்.

"தெரியுமா சேதி? உங்களுச்கு எப்படிப் புரியமுடியும்? இந்தயூதர்கள் கடவுளுக்குக் குழந்தையைக் கொலேசெய்து படைப்பார்கள்! அந்த இரத்தத்தை எடுத்து, அபிடேகம் செய்வார்கள்! அந்த இரத்தத்தை எடுத்து வொயிஞேடு சேர்த்து யூதப்பயல்கள் குடிப்பார்கள். அதற்குத்தான் அக்குழந்தையைக் கொன்றிருக்க வேண்டும்," என்ருன்.

எழுத்தின் வாயிலாகத் தான் பெற்ற புகழைக்கொண்டு, அந்த புகழொளியில் புன்மைத்தனமான வெறியைப்பரப்பினுன்! யூதர்களை ஒழித்துக்கட்ட எழுதித் தள்ளினுன்! கவிஞனும், எழுத்தாளனும் இரவாப்புகழைத் தரும் இலக்கிய படைப்புகளில் இறங்குவதற்குப் பதில், இப்படி வெறியை வளர்த்து அதன் நிழலில் வலம்வர வரும்புவது, 'எளிய விளம்பரம்'பெறஏதுவாகும்! இப்போதும்கூட 'எதையாவது ஒன்றைச் சரியென்று வாதிக்க சண்டமாருதம்போல் கிளம்புவதும், பிறகு அதுபிடிக்காதபோது அதையே, சீச்சி, தூத்தூ என அதே வேகத்துடன் வீறுகொண்டு எழுதுவதுமான, கவிஞர்களை இங்கேயும் நாம் காணவில்லையா!!

ஸ்ட்ரெய்சர் தன்னுடைய யூத வெறி, குழந்தை வயதிலிருந்தே ஜெர்மானியர்களுக் கேற்பட வேண்டுமெனக்கருதி, பாடநூல், ஒன்றும் எழுதினுனும். அந்தஅரிச்சுவடியில் அவன் எழுதிய பாடம் இது::

(பக்கம் 9:) ஆசிரியர் கரும்பலகையிடம் போய் நிற்கிருர். கரும்பலகையில் ஒரு கவிதையை எழுதுகிருர். குழந்தைகள் அதை மனப்பாடம் செய்கின்றன. அப்படி மனப்பாடம் செய்யவேண்டிய கவிதை:

யூதனுடைய முகம் பேய் முகம். அவன் பேசினுல் பேய் பேசுவதாகும்! பேய் என்ருல் 'பிளேக்' நோயைப்போல — ஆயிரம் நோய் உள்ளவன் யூதன். பார்த்தாலே பயங்கரம், அவனை ஒழிக்க வேண்டும் நாம்!

பிஞ்சுப் பிள்ளைகளுக்கு இப்படி பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டால் அவர் தம்மனதில் என்ன எண்ணம் படியும்?

(பக்கம் 32:) 'இன்' என்பவள் ஒரு யூத டாக்டரின்எதிர்அறையில் உட்கார்ந்திருக்கிருள். அவள் ரொம்ப நேரமாச உட்கார்ந்திருக்கிருள். ஜெர்மானியப்பெண்களை இப்படித்தான் யூத டாசடர் உட்கார வைப்பார்கள். அங்கே கிடக்கும் பத்திரிகைகளைப் பொழுது போவதற்காகப் புரட்டுகிருள். 'ஜெர்மன் பெண்கள் லீக்' தலைவி பேசியது அவள் கவனத்துக்கு வருகிறது. "ஒரு ஜெர்மானியன் யூத டாக்டரிடம் போகக் கூடாது! அதிலும் ஒரு ஜெர்மானியப்பெண் போவதென்பது கேவலம்!! நோய்க்கு மருத்துவம் தேடிப்போகும் பல ஜெர்மானியப்பெண்கள், யூத டாக்டர்களிடமிருந்து மருந்துகளைகளையல்ல, நோய்களையும் பல விதமான சீக்குகளையுமே பெற்றுக் கொள்கிருர்கள்," என்று அவள் பேசியது ஞாபகம் வருகிறது. அதே சமயம டாக்டருடையஅறையிலிருந்து "டாக்டர்! என்னை விடுங்கள்! விடுங்கள்!!" என்று ஒரு இளம் பெண் அலறும் சப்தம் காதில் விழவே, வந்தது தவறு என்று ஓடுகிருள் இன்.

(பக்கம் 61:) நம்ப் எனும் பெயர் கொண்ட அந்தப் பையன் ஒன்றும் பேசவில்லை. திடீரென நின்ருன். அவனுடைய இரண்டு நண்பர்களையும் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுஓடினுன். எதிரே ஒட்டப்பட்டிருந்த பெரிய போஸ்டரைக் காட்டினுன். அதில் ஸ்ரெய்ச்சர், "யூதர்கள்—நம்முடைய துரதிர்ஷ்டம்" எனும் தலைப்பில் பேசுவார் என்று குறிக்கப்பட்டிருந்தது. "ஆகா! அவர் பேச்சைக் கேட்க வேண்டும்" என்று கூவினுன் ஒரு பையன். இன்னெருு பையன், போன தடவை அவர் பேசிய கூட்டத்துக்கு போயிருந்தேன், அப்பப்பா ஆயிரசகணக்கானேர் வந்திருந்தார்கள், யூதர்களைப் பற்றி நன்ருக விளக்கினுர். அவர்களால்தான் நம்நாடுஅழிகிறது என்று சொன்னுர், ஒரு நாளைக்கு உலகமேஅவர்களால் தான் அழியும் என்ருர், அவர்களுடைய வீட்டிலிருக்கும் பறவைகள் கூடக்கூடாது, ஒரு பூச்சிப் பொட்டு இல்லாமல் யூதர்களை ஒழித்துக்கட்டினுல் தான் உலகமே உருப்படும் என்ருர்."

இளங்குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட நூல்கள் பாடப்புத்தக அமைந்திடின் கள்ளங் கவடறியாத அவர்கள் மனதில் இந்த எண்ணங்கள் பதிந்திடின், அவர்களுக்கு யூதர்களைப் பற்றிய கருத்து எப்படி வளரும்? ஏதோ, தாங்கள் உலகில் பிறந்ததே இந்த யூதர்களை ஒழிப்பதற்குத் தான என்றுதானே எண்ணுவர்! இப்படிப்பட்ட எண்ணம இளம் மாணவர்களிடையே வெகு வேகமாகப் பரவியதால் ஸ்ட்ரெய்சர் எனும் தீயனுக்கு, அடிக்கடி ஜெர்மானிய வளர்பிறைகளான மாணவர்களிடமிருந்து, இப்படிப்பட்ட கடிதங்கள் வருமாம்:

"உங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு வாரமும் நாங்கள் படிக்கிரேம்! எங்களுக்கு அதுஓர்பெரிய விருந்து யூதர்கள் என்ருல் எப்படியென்று சரியாகப்படம் பிடித்திருக்கிறீர்கள். உங்கள் பத்திரிகையில் வருவதையெல்லாம் கத்தரித்து ஆங்காங்கே ஒட்டிவைக்கிரேம். யூதர்களைப்பற்றிய அப்படிப்பட்ட கேலி படங்களையெல்லாம் எவ்வளவு ஆவலோடுபார்க்கிருர்கள் தெரியுமா மாணவ மாணவிகள்! இப்பொழுது நாங்கள் ஒரு ழியைக் கண்டு பிடித்திருக்கிரேம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை இரவும் எங்களுடைய ஆஸ்டல் தலைவன் யூதர்களைப் பற்றி ஒரு கேலி நாடகம் போடுகிருன். யூதனைப் போல் வேடம்போடுபவனுக்குப் பேயை போல அலங்கரிக்கக் கூடிய பெரிய மூக்கு இருக்கிறது!!"

"சார்! நேற்று ஒரு பெண்மணி, யூதனுடைய கடையில் போய் 'காலணி'களை வாங்கி விட்டாள். உடனே அவள் கணவனிடம் போய் புகார்செய்து. உதை வாங்கிக் கொடுத்தோம்."

படிக்கவே உங்கட்கு விந்தையாயிருக்கும்! யூத இனத்தின்மீது இப்படியெல்லாம் வெறுப்புகள் தூண்டப்பட்டன! இந்த இளம் பிள்ளைகள் நாளைக்குப் பெரியவர்களானுல் சும்மா விடுவார்களா, யூதர்களை? ஹிட்லர் தன்னுடைய சிறுவயதில் இதே போன்ற சூழ்நிலையில்தான்வளர்ந்தான். ஆரிய இனம்! ஆரியம்! அதுவே உயர்ந்தது—அதற்குப் போட்டியாக இன்னெருு இனமா-அவர்களிலே படித்தவர்கள் இருப்பதா—பணக்காரர் இருப்பதா—இது அக்கிரமமல்லவோ?— என்றெருு எண்ணத்தை இருதயத்தே வளர்த்துக் கொண்டான்.

ஆதியில், இந்தத் துணைக்கண்டத்துள் ஆரிய இனம் எடுத்தடி வைத்தபோது தன் கூட்டமே உயர்ந்தது—மற்றவர்கள் 'தஸ்யு'க்கள்—நமக்குத் தாசர்களாயிருக்கவே பிறந்தவர்கள் என்று

11-ம் பக்கம் பார்க்க


## புதிய வெளியீடுகள்

திருவாளர் தேசியம் பிள்ளை (நாடகம்)
(கலைஞர் மு. கருணுநிதி, 1—50

அண்ணுவின் வாழ்க்கைக் குறிப்புகள்
(மலிவுப் பதிப்பு, இரா. தியாகராசன்) 1—50

மதனமண்டபம் (முல்லை சத்தி) 2—50

நிலவும் தாமரையும் (மலிவுப் பதிப்பு)
(டி கே. சீனிவாசன்) 1—50

வெளியீடு
கே. ஆர். நாராயணன், 12--மாடல் ஹட்மண்ட்ரோடு,
சி. ஐ. டி. நகர்--சென்னை—15

# வளர்பிறை காண்பீர்!


23---6---61 வெள்ளியன்று குமரி மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு சீரும் சிறப்புமாக நாகர்கோவில் தங்கம் தியேட்டரில் நடைபெற்றது.

அன்று காலை 8-மணிக்கு கோட்டாறு ஈத்தாமொழி சந்திப்பிலிருந்து மாணவர் பொதுச் செயலாளர் தோழர் எஸ். டி. சோமசுந்தரம் பி. இ. அவர்கள் தலைமையில் மாபெரும் ஊர்வலம புறப்பட்டு--காலை 9 - 30 மணிக்கு மாநாடு நடைபெறும் தியேட்டரை அடைந்தது. ஊர்வலத்தில் சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலம் சென்ற வழி நெடுக---வளைவுகள்---தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

ஊர்வலம் தியேட்டரை அடைந்தவுடன் பொதுச் செயலாளர் கொடியேற்றி வைத்தார். காலை பத்து மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. வரவேற்புரை நிகழ்த்திய தோழர் எம். சி. பாலன் பி. ஏ. பி. எல் அவர்கள் தமது வரவேற்புரையில், "குமரி மாவட்டம்-வளமான பகுதி, கல்வி கற்றோர் அதிகமாக வாழ்கிற மாவட்டம். ஆனால் கல்வியின் தரம் வளர்ந்த அளவு--அரசியல் விழிப்புணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை--எனக் குறிப்பிட்டு எல்லோரையும் வருக, வருக என வரவேற்றார்.

தோழர் அன்புச்செழியன் எம். ஏ. அவர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்து--நாங்கள் அரசியலில் நேரடியாக ஈடுபடுவதில்லை. தி. மு. க. வின் கொள்கைகளை நாட்டிலே கூறி வருகின்றோம். மாணவர்களை நேரடியாக ஈடுபட வைத்தால்---ஒரே மாதத்தில் திராவிட நாடு அடைந்தே தீருவோம். அறிஞர் அண்ணா அவர்கள் எங்களை தடுத்து நிறுத்தியுள்ளார்கள் எனக் குறிப்பிட்டார்.

மாநாட்டுக்கு தலைமை வகித்த ஆலடி--அருணா பி. ஏ. பி. எல். அவர்கள் திராவிட நாடு கிடைக்குமா? என சில வரட்டுத் தவளைகள் சத்தமிடத் துவங்கியுள்ளன. பகுத்தறிவுப் பாசறையில்---பத்து ஆண்டுகள் பாடம் படித்தும்--பதவி மோகத்தாலோ---பண ஆசையாலோ --- கொள்கையை காற்றிலே பறக்கவிட்ட--புல்லுருவிகள்--அறிஞர் அண்ணா அவர்களைத் திட்டுவதிலும்--கழகத்தை தூற்றுவதுமாகிய இழி செயலில் இறங்கியுள்ளனர். இலட்சங்களைப் பெற்று--இலட்சியங்களை விட்டுவிட்ட---சிறியார்களைப்பற்றி இதுவரை பேசியதற்கு மன்னிக்க வேண்டுமெனக்கூறி நீண்ட ஒரு பேருரையாற்றினர். மீண்டும் அவர் பேசுகையில், தொன்று



வீரங்கொள் கூட்டம் வெற்றி நடைபோட்டது நாகர்கோயிலில்!

தொட்டே, சரித்திரங்களைப் புரட்டிப் பார்த்தால், ஒவ்வொரு நாட்டின் விடுதலையும், மாணவர்களாலேயே ஆகியுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

தோழர் த. கிருட்டிணன் எம். ஏ. அவர்கள் "போராட்டம்" என்ற தலைப்பிலும், தோழர் களந்தை ஜின்னா "தென்னகத்தில் நாம்" என்ற தலைப்பிலும், நல்லரசு பி.ஏ.பி.டி. 'மறுமலர்ச்சி' என்ற தலைப்பிலும், இளங்கோவன் பி. ஏ. அவர்கள் 'திராவிடமும் வரலாறும்' என்ற தலைப்பிலும், ஆர். தியாகசாமி பி. ஏ. 'குமரி முனையில் திராவிடக் குரல்' என்ற தலைப்பிலும் ஏ. திரவியம் 'பிரிவினையில் ஒற்றுமை' என்ற தலைப்பிலும் பேசினார்கள். அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மீண்டும் பிற்பகல் 3- மணிக்கு மாநாடு ஆரம்பமாயிற்று. பெ. சீனிவாசன் எம். ஏ. 'காணிக்கை என்ற தலைப்பில் நீண்டதொரு பேருரையாற்றினர். திராவிடத்தின் விடுதலைக்கு தமது உயிரை காணிக்கையாக்கிய வீரர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துவிட்டு--விடுதலைப் போராட்டத்துக்கு தமது உழைப்பை--உறுதியை காணிக்கையாக்க வேண்டுமென மாணவத் தோழர்களைக் கேட்டுக்கொண்டார்.

பி. கே. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல் "மாணவர்களும் அரசியலும்" என்ற தலைப்பிலும், த. வெற்றிநம்பி பி.ஏ. "திராவிடம் பிரிந்தால் வாழுமா?" என்றதலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

கேரளம் சில்வர்ஸ்டார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் கேரளத்தில் பரவாது என்று கூறித் திரிபவர்கள், கேரளத்தின் அரசியலை புரிந்துகொள்ளாதவர்கள் என்றும், கேரளத்தில் அறுபதுக்கும் மேற்பட்டக் கிளைகள் இருக்கிறதென்றும்---விடுதலை போராட்டத்தில் கேரள மக்கள்--முன்னணி வீரர்களாகத் தம்மை ஆக்கிக்கொள்ள தயாராக உள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

கேரள மசூத்--'கேரளம் கேட்கிறது' என்ற தலைப்பில் தி. மு. க. வின் கருத்துக்களை கேரளத்திலுள்ள மாணவர்கள் கேட்கிறார்களென்றும், அதன் அறிகுறியாக வருகிற ஆகஸ்ட் மாதம்--மாணவர் மாநாடு நடைபெற இருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.


ச. அமுதன் பி. ஏ. அவர்கள் 'பாவமன்னிப்பு' என்ற தலைப்பில் அரசியலிலே பாவங்களைச் செய்துவிட்டு—மன்னிப்புக் கேட்கின்ற பாவிகளுக்கு---திராவிடம் நல்ல பாடம் கற்று கொடுக்கும் எனக் குறிப்பிட்டார்.

எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ. (பி. எல்) அவர்கள் "ஏன் திராவிடநாடு" என்ற தலைப்பில் சிறப்புமிக்க பேருரையாற்றி மாணவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்தினர்.

மு. ப. அழகியநம்பி பி. ஏ.பி. எல். அவர்கள் "விடுதலையில் நியாயம்" என்ற தலைப்பில் விடுதலை அடைந்திருக்கின்ற பல்வேறு நாடுகளைச் சுட்டிக்காட்டி--திராவிட நாடு கேட்பதின் நியாயத்தை வலியுறுத்தினர்.

'நாட்டு விடுதலையில் நமது பங்கு' என்ற தலைப்பில் என்.வி. என். சோமு பி. ஏ. அவர்கள்—மாணவர்கள் விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நிற்க வேண்டுமென்றும்—வெள்ளை ஏகாதிபத்தியத்தை இந்நாட்டிலிருந்து ஓட்ட--எடுத்துக்கொண்ட முயற்சியில், பெரும் பங்கு ஆற்றியவர்

(4-ம் பக்கம் பார்க்க)



மாணவர் முழக்கம் கேட்டு — அகம்களிக்கும் மக்கள் திரளில் ஒரு பகுதி!



# நமது பாசறை

## டி. கே. சீனிவாசன்

அடித்தடித்துச் சொன்னாலும் அசையாமல் நாங்களெல்லாம்
பிடித்தபிடி யோகுரங்குப் பிடிதான்! எனவிருக்கும்
வடித்தெடுத்த '**அது**' களுக்கு வலிவான ஆதாரம்
எடுத்தெடுத்து வைத்து எதிர்க்கேள்வி பலபோட்டு
முழங்கிவரும் தமிழ்முரசு! முழுமாம் பழத்தமிழை
வழங்குகிருர் பேச்சாக்கி. வசந்தத்துப் பூந்தென்றல்

கேட்டுக் கிலுகிலுக்கும்!
கேளார்தம் நெஞ்சமெலாம்
கேட்கத் துடிதுடிக்கும்
கிண்டலொடு நகைச்சுவையைக்

கூட்டிக் குழைத்துக் கோடிநாள் ஆண்டாகி
ஓட்ட மெடுத்தாலும் ஓடாமல் என்றென்றும்
பாட்டைப்போல் நிலைக்கின்ற பாங்கான உவமைகளைக்
காட்டிவரும் பேச்சாளர்! கண்ணாடிமுக மனிதர்!

இவர்பேசும் போது எட்டி இருந்தவர்கள்
எவர்பேச்சு இது? அண்ணா எங்குவந்தரோ இங்குளன
விரைந்தோடி வருகின்ருர்! விவரம் புரிந்தவுடன்
திறந்தவாய் திறந்தபடி திகைத்தப ீ நிற்கின்ருர்!
சின்னஅண் ணாதுரைதான்! அண்ணாவின் எதிரொலிதான்
சொன்னாலும் சொன்னார்கள் சுவையா.ா உண்மைதனே!

நாடு நகரெல்லாம்
நல்லவர்கள் வல்லவர்கள்
கூடி மகிழ்ச்சியுடன்
கொண்டாடிப் பேசுகின்ற
ஆடும் மாடும்
அறியாதார் யாருண்டு?—இவர்தான்

தென்னகத்துக் காண்டேகர்! தெளிவான உண்மைகளைப்
பின்னிக் கதையாக்கிப் பிறருக்கும் தெளிவாக்க
உருவகங்கள் பலபின்ன உவமை இழையோட
உருவகங்கள் ஒவ்வொன்றும் ஓடிவந்து கண்ணெதிரில்
நிற்பதுபோல் காட்டி நிகழ்ச்சிகளைத் தொடர்கின்ற
கற்பனையின் சிகரம்! கற்கண்டு எழுத்தாளர்!

தாமரைச் செல்வன்
தமிழுக்குத் தனிச்செல்வன்!
சீர்வாய்ந்த அண்ணன்
சிறுகதை மன்னன்
டி. கே. சீனிவாசன்!

—∘∘—∘∘—∘∘—

**கவிஞர் 'பொன்னிவளவன்'**

(-3ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மாணவர்களென்றும்--வடவர் ஏகாதிபத்தியத்திலிருந்து திராவிடத்தை விடுவிக்க---மாணவர் சமூகத்தின் சேவை, பெரும் அளவுக்குத் தேவையென்றும் ஒரு மணி நேரத்திற்குக் கூடுதலாக வலியுறுத்திப் பேசினர்.

கே. ஏ. கிருட்டிணசாமி எம்.ஏ. (பி. எல்) அவர்கள் "தீப்பொறி" என்ற தலைப்பில் ஒருமணி நேரத்துக்குக் கூடுதலாகப் பேசி மாணவர்களின் கையொலிக்கிடையே- தனது உரையை முடித்தார்.

மாணவப் பொதுச் செயலாளர் எஸ்.டி. சோமசுந்தரம் பி.இ. அவர்கள் திராவிடத்திற்கு மாணவர்கள் ஆற்றவேண்டிய பங்குகள் குறித்து நீண்ட உரையாற்றி மாணவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றையும் மனதில் கொண்டு மாநாடு நடத்திய நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்து தமது உரையை முடித்தார்.

ஆல்டி அருணா பி. ஏ. (பி. எல்) அவர்கள் தமது முடிவுரையில்—நிமிடத்திற்கு நிமிடம் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் அரசியல் வாதிகளின் சுயநலத்திற்கு மாணவர்கள் பலியாகிவிடக்கூடாதென்று கேட்டுக்கொண்டு தனது முடிவுரையை ர்ண்ட கையொலிக்கிடையே முடித்தார்.

எம். சி. பாலன் பி. ஏ. பி. எல். அவர்கள் நன்றிகூற மாநாடு இரவு 10--30 மணிக்கு முடிவுற்றது.

மாநாடு தியேட்டரில் இடம் கொள்ளாத காரணத்தால், தியேட்டரைச் சுற்றியும் பந்தலமைத்து பார்வையாளர்களுக்கு மாநாட்டைக் கவனிக்க வசதிகள் செய்யப்பட்டிருந்தன. குமரி மாவட்டத்தின் எல்லா இடங்களிலிருந்தும், கேரளத்தின் பல பகுதிகளிலிருந்தும் மாநாட்டைக் கண்டுகளிக்க திரளாக பார்வையாளர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நாற்பதுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் சிறப்புரையாற்றினர்கள் நாகர்கோவில் நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. நகரெங்கும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, கழக கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

பார்வையாளர்களாக மாவட்டச் செயலாளர் பி. எம். கண்ணு, கி. மனோகரன் எம். ஏ. அவர்களும் மற்றும் குமரி மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்திருந்தனர்.

## மாநாட்டுத் தீர்மானங்கள்:

1. சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவிற்கு ஏகமனதாக அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. காவல் துறை என்றிருந்ததை மாற்றிவிட்டு போலீஸ் ஸ்டேஷன் என்று ஆக்கியிருப்பதைக் கண்டித்தும் காவல் நிலையம் என்றே இருக்கவேண்டுமென கேட்டுக்கொண்டு சி. கிருட்டிணன் பி. ஏ. பி. எல். முன்மொழிந்து கு. செ. பெருமாள் வழிமொழிய ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. நாகர்கோவில் நகரில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கவேண்டுமென ஆர். நீலகண்டன் பி. ஏ. எல். எல். பி, முன்மொழிய எம். ஏ. மசூத் வழிமொழிய ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. நெல்லை சந்திப்பிலிருந்து—நாகர்கோவில் வழியாக திருவனந்தபுரத்திற்கு இரயில் பாதை அமைக்கவேண்டுமென இளங்கோவன் முன்மொழிய களந்தை ஜின்னா வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. இந்திய அரசாங்கம் தென்னகத்தில் இந்தி மொழியைத் திணித்து திராவிட மொழியை அழிப்பதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சியை கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது என்பதை எம். எஸ். வெங்கடாசலம் முன்மொழிய ஏ. சிதம்பரம் வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றியது.

6, குமரி மாவட்டத்தில் கூட்டுறவு முறையில் ஒரு நூற்பு ஆலை நிறுவ, சென்னை அரசாங்கம் முன்வரவேண்டுமென நல்லரசு முன்மொழிந்து, என். வி.என் சோமு வழிமொழிய ஏகமனதாக நிறைவேற்றியது.

7. குமரி மாவட்டத்தில் பெண்கள் கல்லூரி ஒன்று நிறுவவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு வெற்றிநம்பி முன்மொழிய இரா. சொர்ணலிங்கம் வழிமொழிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

8. இலங்கைத் தமிழரின் தொல்லைகளை தீர்த்துவைக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென ஏ. திரவியம் முன்மொழிய சீனிவாசன் வழிமொழிய கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

9. குமரி மாவட்டத்தில் ஸ்டேடியம் இல்லாதகுறையை விளக்கி இதனை அரசாங்கம் இன்னமும் செய்யாத நிலைமையைக் கண்டித்து உடன் தானே நாகர்கோவில் நகரிலேயே ஒரு ஸ்டேடியம் ஏற்படுத்துமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொண்டு எஸ். எம். டி. தாசீம் முன்மொழிந்து, மு. ப. அழகியநம்பி வழிமொழிய கூட்டம் ஏகமனதுடன் ஏற்றுக்கொண்டது.

மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா பேராசிரியர் க. அன்பழகன், தில்லை வில்லாளன், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், மாவட்டச் செயலாளர் பி. எம். கண்ணு, புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி கி. மனோகரன் முதலியோர் வாழ்த்துக்கள் அனுப்பிச் சிறப்பித்தனர்.

—0—




கடிதத்தை ஆயிரம் தடவைகளுக்குமேல் படித்திருப்பான் கமலா. அப்படியும் அவனுக்கு ஆவலடங்கவில்லை. தன்னுடைய முகவரியையும் அக்கடிதத்தில் தெளிவாகவே எழுதியிருந்தாள், லீலா. ஆம், கமலாவுடன் ரயிலில் பிரயாணம் செய்த அதே அழகு மங்கை லீலாதான்! கல்கத்தாவில் தன் இல்லம் சேர்ந்து படுக்கைக்குள்ளிருந்த பொருள்களை உதறிய போது, பணப்பை விழுந்தது!!! எடுத்துப் பார்த்த லீலா, திடுக்கிட்டுப் போய விட்டாள். கீழே விழுந்து கிடந்திருக்கும் படுத்திருந்த நம்முடையது பை போலும் என்று இருந்தபிராயாணிகளில் யாராவது படுக்கைக்குள் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினாள்.

'ஏ! வித்அவுட்' என்று டிக்கெட் பரிசோதகர் தள்ளப் பரிதாபமாக விழித்துக் கொண்டு ரயில்வே பிளாட்பாரத்தில் நின்ற கமலாவின் கவனமும் அவளுக்கு வந்தது! ஒரு உயிர், தன்னால் மாட்டிக் கொள்ளுமே சிறையில் என்று துடித்தாள். அப்படிஅவள்

### :- தொடர் கதை -:

பணப் பையுடன் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் "என்ன லீலா!" என்று கூப்பிட்டுக் கொண்டு அவளுடைய தந்தை நுழைந்தார், அவர் கண்ணில் படக்கூடாதே பணப்பை என்று அவசர அவசரமாக எடுத்து ஒளித்தாள். லீலாவுடைய தந்தை ஆபிரகாம் ஒரு மாதிரியான ஆள்! இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களின் இனத்தைச் சேர்ந்தவர். அவருடைய ஆதிப் பெயர் தங்கமுத்து. வறண்ட தமிழ்நாட்டை விட்டு எங்காவது போய் இன்பமாக வாழலாம் என்று வந்தார் கல்கத்தாவுக்கு. அவர்எதிர்பார்த்ததும் வீண் போகவில்லை. அவர் வரவும் போர் துவங்கவும் சரியாகயிருக்கவே, இராணுவத்தில்சேர்ந்தார். ஜப்பானியரின் படைகள் மணிபூர்வரை வந்தபோது அப்படைகளை எதிர்த்துப் போராடிய போது படுகாயமடைந்தார்! அப்படி அவர் படுகாயமடைந்திராவிடின் அஞ்சலையை அவர் சந்தித்திருக்க முடியாது. அவரைப் போல் தமிழ்நாட்டைவிட்டு, பர்மா சென்று வாழ்ந்த கூட்டத்தைச் சேர்ந்தவள் அஞ்சலை.

ரங்கூன் ஜப்பானியரின் குண்டு வீச்சுக் கிரையானதும் குய்யோ முறையோவென்று தரைமார்க்கமாக ஓடிவந்த நூற்றுக்கணக்கானவர்களிலே அஞ்சலையும் ஒருத்தி. வழியில் அவளுடைய தாயும் தந்தையும், வயோதிகமும் வழிநடந்த வேதனையும் வாட்ட மாண்டனர். அதுமுதல் தன்னந் தனியாளாய்த்தமிழ்நாடு எவ்வளவு தூரமோ என்று நடந்து வந்து கொண்டிருந்த நேரத்தில்தான், படுகாயமடைந்து கிடந்த தங்கமுத்துவைக் காண நேரிட்டது. தன்னைக் காப்பாற்றி, தனக்கு வேண்டியவை அளித்து உதவியதோடு மட்டுமின்றி, தமிழ்க்குரலே கேட்டறியாத காட்டோரத்தில் தமிழ் பேசும் அஞ்சலையைக்கண்டதும் அவர் மனம் துள்ளியது. பலன், இருவரும் கணவனும் மனைவியுமாயினர்! ஒரு போலீஸ் அதிகாரியின் வீட்டில் கார் டிரைவர் உத்தியோகத்துக்குப் போன போதுதான், தன மனைவியின்

## அண்ணல்

யோசனைப்படி தங்கமுத்து என்கிற பெயரை ஆபிரகாம் என்று வைத்துக்கொண்டார். அதனால் என்ன லாபம் பெற்றாரோ இல்லையோ அவரை யாரும் நீ என்ன பள்ளரா, பறையரா என்று கேட்கின்ற கொடுமைமட்டும் நிச்சயமாகக் குறைந்தது! அதன்பிறகே லீலா பிறந்தாள்.

பிறந்த மகள் வளர்வதைப் பாராமலே போய்விட்டாள் அஞ்சலை. அதுமுதல் மகளைக் கண்ணும் கருத்துமாய் படிக்க வைத்தார் ஆபிரகாம். அவளும் படித்து பலரும் பாராட்டுமளவில் தேர்ச்சிகளும் பெற்றதோடு ஒருஅலுவலகத்தில் 'டைப்பிஸ்டாக' பணியாற்றிக் கொண்டிருந்தாள். அவளுடைய தோழிஒருத்திக்குநடந்த திருமணத்தை முன்னிட்டு, சென்னைக்கு வந்து, அப்படியே தமிழ்நாட்டு ஊர்களையும் பார்த்து விட்டுக் கல்கத்தா திரும்பியபோது தான், ரயிலில் கமலா அவளைக் கண்டது. மிஸ்டர் ஆபிரகாமுக்கு வயது ஏற ஏற, இளவயதுப் பழக்கம் ஒன்றும் கூடவே வளர்ந்தது! அதுவும் லீலா சம்பாதிப்பதால் அந்தப் பழக்கம் மிக மிக அதிகமாகி விட்டது. காசு பணம் கண்ணில்பட்டால் எடுத்துக்கொண்டு போய்க் குடித்துவிட்டு வந்துவிடுவார். இதனால் லீலா மிகவும் சிரமத்துக்கு ஆளானாலென்றாலும் தந்தையின் மேலுள்ள பிரியத்தால் பொறுத்துக் கொள்வாள்!

இவ்வளவு தூரம் நல்ல பெண்ணான தன் மகளுக்குக் கலியாணம் செய்துவைக்க வேண்டுமே யென்கிற ஞாபகம் போதையில்லாத நேரத்தில் வருவதுண்டு!!

பணப்பை அவர் கண்ணில் படாமல் உரிய ஆளுக்கு அனுப்பி விட வேண்டுமென எண்ணிய அவளுக்கு எப்படி அனுப்புவது, எங்கே அனுப்புவது, என்று புரியவில்லை. ஒன்றுமட்டும் தெரிந்தது! டிக்கட் இல்லாததால் எப்படியும் அந்த ஆள் சிறைக்குள் தள்ளப் பட்டிருப்பார்—அதனால், அவர் இறக்கிவிடப்பட்ட ஊர் ஸ்டேஷன் மாஸ்டருக்கு அனுப்பிக் கடிதமும் எழுதுவோம் என எண்ணினாள். உடனடியாக ஒரு வேண்டுகோள் கடிதமும் எழுதி, பணப்பையை இன்ஷியூர் செய்து, அந்த ஸ்டேஷன் மாஸ்டருக்கு அனுப்பினாள். நல்லவேளையாக ரயிலில்தான் 'பிரதாபங்களை'ச் சொன்னபோது தன் பெயர் கமலநாதன் என்று கமலா சொல்லியிருந்தான்.

எப்போது கமலாவுக்கு ஒருவாரசிறைவாசத் தண்டனை கிடைத்ததோ. அதற்கு இரண்டு நாட்களுக்கெல்லாம், அந்தப்பை சேர்ந்தது ஸ்டேஷன்மாஸ்டருக்கு ஸ்டேஷன்மாஸ்டர் சிவப்பிரசாத் மிகவும் நல்ல மனிதன். மிக சமீப காலத்தில் அவர் பணியாற்றிய இடத்தில்டிக்கட்டில்லாதகாரணத்துக்காக சிறைக்குப் போனது கமலாதான். அதனால் அவனைப் பற்றி அவருக்குநல்ல ஞாபகம் இருந்தது. எனினும் என் செய்ய முடியும்? கோர்ட்டில் தண்டனையளித்தபிறகு, எவ்வளவு பணமிருந்தாலும் என்ன செய்ய முடியும்! ஜெயில் அதிகாரியும் வருந்தினர். அவன் விடுதலையானதும், ஒப்படைப்பதாகபணப்பையையும்

> இந்தவார இதழின் முகப்பை அலங்கரிக்கும் அண்ணா அவர்களது ஓவியத்தைத் தீட்டி நமக்கு வழங்கியவர் சிறந்த ஓவிய திலகமான தோழர் பாரி அவர்கள்.
>
> —ஆசிரியர்

கடிதத்தையும் வாங்கி வைத்துக் கொண்டார், ஸ்டேஷன் மாஸ்டரிடம். ஆயிரத்தொராவது தடவையாக ரயிலடியில் உட்கார்ந்து கொண்டு கமலா திருப்பித் திருப்பிப் படித்த கடிதத்தில் லீலா எழுதியிருந்தது, இது.

3-2டல்கௌசி தெரு,
கல்கத்தா.

ஐயா,

தாங்கள் காணவில்லையென்று தவித்த பணப்பை தவறுதலாக என் படுக்கையில் இருந்தது. முகவரி தெரியாததால், தாங்கள் இறக்கிவிடப்பட்ட புகைவண்டி நிலையப் பொறுப்பாளருக்கு அனுப்பியிருக்கிறேன். மிகவு வருந்துகிறேன். கல்கத்தா வந்தால் உங்களைச் சந்திக்கமகிழ்ச்சி அடைவேன்.

அன்புள்ள,
லீலா.

கையில் பணம்! மனதில் தெம்பு! கமலா கல்கத்தாவை அடைந்தான். முதல்காரியமாகக் குறிப்பிட்ட முகவரிக்குப்போய் லீலாவைப் பார்க்கப் போனான். லீலா குறிப்பிட்டிருந்தமுகவரியில் புதிதாகத் துவக்கப்பட்ட ஒரு துணிக்கடை யிருந்தது, அங்கே குடியிருந்தவர்கள் போய்விட்டதாகச் சொன்னார்கள்! லீலாவும் அவள் தகப்பனும் இருந்த இடம், நகரின் மையமான பகுதியாகும். அவர்களுக்கு அந்த வீடு சொந்தமானதல்லவென்றாலும், நீண்ட நாளாக அங்கே வசித்து வந்ததால், வீட்டுச் சொந்தக்காரன் அவர்களைக் கிளப்ப முடியாமல் அவதிப்பட்டு வந்தான். மாதம் துவங்கிச் சம்பளம் வாங்கியதும் முதலில் வீட்டு வாடகையைக் கொடுத்து விடுவாள் லீலா. அதனால் அவர்களைக் காலி செய்யச் சொல்லமுடியாத வீட்டுக்காரன் வேறொரு முடிவுக்கு வந்தான்! தன் வீட்டைவிட்டுக் காலிசெய்ய

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

அரசியல் கங்காணிகளுக்கு அதிர்வேட்டு!
விடுதலைப் படைதிரட்டும் பணிக்கு இன்னுமோர் பாசறை!

'போர் முரசு' திங்களிருமுறை தி. மு. க. ஏடு.
ஆசிரியர் டாக்டர் முத்துச்செல்வம்

அறிஞர் அண்ணாவின் எழுத்தோவியத்துடன் முதல் இதழ் ஜூலை 15-ல். மாநில மாநாட்டுப் பந்தலில் கிடைக்கும்.

நாடெங்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை! வினா—விடை பகுதிக்குக் கேள்விகள் வரவேற்கப் படுகின்றன!

விவரங்கட்கு: நிர்வாகி, 'போர்முரசு' 1837—அப்பாள்புரம், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம்.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒலி - 1 வெள்ளி 7-7-61 கதிர் - 18

# திருத்தினம், நமக்கு !

வருக! வருக!! என்று கூடல்மாநகர் திராவிட முன்னேற்றக்கழகம் குதூகலத்தோடு அழைக்கிறது! எமது மாவட்டத் தோழர்களின் மறக்க வொணுத் தொண்டினைக் கண்டிட வாரீர் என்று மதுரை முத்து அழைக் கிருர்! திருச்சி மாவட்டத்துச் செயலாளரும் மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவருமாகிய அன்பில் தர்மலிங்கமும், மற்றிருசெயலாளர்களாகிய ஆவுடையப்பனும், வழக்கறிஞர் மணியமும், அதே ஆர்வத்தோடு விடுக்கின்றனர் அழைப்பு! தொண்டர் படைத்தலைவர்களாம் பா. சீனுவாசன் காதற்கனிஆகியோரும்வாரீர், வந்து பாரீர் என்று விடுக்கின்றனர் வேண்டுகோள்

விளம்பரப் பிரிவினரோ, தமிழில் மட்டுமல்ல, தெலுங்கிலும், மலையாளத்திலும்கன்னடத்திலும் சுவரொட்டிகள்போட்டு அந்தந்த மாநில மக்களையும் அழைத்திருக்கிறோம் தெரியுமா என்று ஆர்வந்ததும் தருகின்றனர்தகவல்! அதோ பாரீர்—அதுதான் பந்தல்—இதுவாயில்—இங்கே வண்டிகள்நிற்க இடம்—அங்கே சாப்பிட வழி—கே. ஆர், ஆர்., எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர். முதலிய கலைஞர்களின் நாடகங்கள் நடக்குமிடம் அது—இங்கேயிருப்பதுதான் கலைக் கண்காட்சிக்கு—சினிமாக் காட்சிக்கும் ஏற்பாடுகள் உண்டு—பார்த்திரோ எமது பாண்டியன் நகரையும் தியாகர் திருப்பெயர் கொண்டு விளங்கும் பந்தலையும் என்று பூவசத்தோடு, குன்றம் சென்று மகிழ்ச்சியோடு பேசித் திளைக்கின்றனர் கழகத் தோழர்கள்! அவர் தம் மகிழ்ச்சி பன்மடங்காகுமளவில் செய்திருக்கிற எமது பணியினைப் பார்க்கப் போகின்றீர்கள் பாருங்கள் என்கின்றனர் கலைக் கண்காட்சிக் குழுவினர்—'கழக வரலாறு' தீட்டினேன், அந்த வரலாற்றைத் தொடர்ந்து எழுதுவோர் எமது குழுவின் கலைக் காட்சியைக் குறிப்பிடாமல் விட முடியாது என்று கூறுகிருர் டி. எம். பார்த்தசாரதி தோழர் செழியனுடன்!

மதுரையில் ஜுலை 13, 14, 15, 16-தேதிகளில் நடக்கவிருக்கும் திராவிட முன்னேற்றக்கழக மூன்ருவது பொதுமாநில மாநாடு, உலகத்துக்கு, நம்முடைய வளர்ச்சியையும் உணர்ச்சியையும் எடுத்துரைக்கும் விதத்தில் அமையும் என்பதில் ஐயமில்லை. "விடுவேனு? இதன் மூலமும் என்ன மிச்சம் கிடைக்கிறது கழகத்துக்கென்று ஒரு கைபார்க்காமல் போவேனு?" என்று பூரிப்பும் கண்டிப்பும் கலக்கக் கூறுகிருர் பொருளாளர் கருணநிதி!!

நாட்டின் கருத்தும் கவனமும், இந்த நான்குதினங்களும் மதுரையின் மீதுதானிருக்கும். என்னடா ஏதேதோ நினைத்தோம்—இடிந்து சரிந்து இருக்குமிடம் தெரியாமற் போய்விடுமென நம்பினேம்—குருவி போவதாலா குடும்ப வீடு காலியாகிவிடும் என்பதை எண்ணினேமில்லையே—இதே போன்ற மாநாடு திருச்சியில் நடந்தபோது சென்றேமே, கண்டோமே மக்களை, பேசினேமே, பெரிய வீரன் என்று போற்றப் பெயரெடுத்தோமே—நம்மை நம்பி வாழ்க முழக்கம் போட்ட அந்த வாயினருக்கு வஞ்சகம் செய்துவிட்டோமே—அவசரத்துக்கு ஆளாகி மாபெரும் தேசிய உணர்வை விட்டு விட்டுத் தெந்தினு பாடிக் கொண்டுவந்த வரையில் லாபம் என்று போய் விட்டோமே—என்கிற சோகம் பிரிந்துபோன நண்பர்களிடையே ஏற்படாமல் இருக்காது! அந்தச் சோகத்தை மறைக்கக்கோபத்தைத் துணைக்கழைப்பர், அத்தோழர்கள்-இதற்கென்றே ஊரையும் ஆளையும் தேடி, ஓடோடியும் சென்று ஏதாவது இழிசொற்களை எடுத்துவிசி தமது திருக்கல்யாண குணத்தைச் செப்பிச் செப்பி வருவர்!!

ஆகா! எப்படியிருக்க வேண்டிய சம்பத் புகழெனும் பூணுரம் பூண வேண்டியவர் பூசணிக்காயன்றே பெரிதென்று போய் விட்டார்! தமிழ் கொழித்த அவர் நா, தமிழையன்றே இன்றைய தினம் கேவலப்படுத்துகிறது! சிவாஜி வேடம் தாங்குவாரே, சந்திரமோகன் நாடகத்தில்? மாவீரனுக வாழவேண்டியவர், மண்டியன்றே இட்டுவிட்டார், கங்கைக் கரைக்கு! உண்மையில், அவர் மாட்டு நமக்குப் பரிதாபமும் பச்சாதாபமே இந்த நேரத்தில், உண்டாகிறது. எனினும் என் செய்வோம்! நறுமலர் நரியாகுமென்று எதிர்பார்த்தோமில்லையே! சுவைதரும் என்று நம்பிய பால் நஞ்சாகும் என்று நாம் எண்ணியதுகூட இல்லையே!! எண்ணுதது நடந்ததால் மனம் புண்ணுகும் நிலை நமக்கு. அவருக்கோ அந்தப் புண்ணில்கூட வேலைப் பாய்ச்சினுல்தான் பொழுதுபோகும் என்கிற நிலை. காலம்எத்துணை மாற்றத்தையும், மன திருப்பத்தையும் கொடுத்துவிட்டது தோழர் சம்பத்துக்கு!! ஊம்...பெருமூச்சு தவிர, பெரியார் குடும்பத்துக்கு நாம்தர என்ன இருக்கிறது?

தூய வெள்ளுடையின் மூலையில் ஒரு சொட்டு 'இங்கி' பட்டு விடின் என் செய்வோம்! நல்லாடையில் பட்டதே என்று முதலில் சிணுங்குவோம். அடுத்த நிமிடமே கறைபட்ட இடத்தைத் தூய்மையாக்க, வழி செய்வதுதானே முறை. அவர் ஒருவர் போனுர்! அவருடன் 411 தோழர்களும் போனுர்கள்!! ஆனுல், இந்த மாதங்களிலே நமக்கு பதினுயிரத்துக்கு மேற்பட்ட புது உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிருர்கள். தூரத்திலிருந்தோர், ஆதாவாளராகயிருந்தோர் எல்லாம், "அப்படியா? அடுக்காதய்யா அடுக்காது!" என்று வரிசை வரிசையாகக் காலியான இடங்களை நிரப்பி, கண்ணீர் வழிந்த நமது மாபெருந்தலைவனின் கண்களைத் துடைகக எம்மாலான தொண்டு எப்போதும் உண்டு என்று சூளுரைத்தவண்ணம் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிருர்கள் நமது பாசறைக்கு.

அதனை எடுத்துக் காட்டிடும் இனியதொரு வாய்ப்பாகாக அமைகிறது மதுரை மாநாடு! யார் போனுலென்ன, எது போனுலென்ன மதுரை மாநாட்டுக்குத் தலைமை தாங்குகிறது எனின், மாநாட்டின் சிறப்பினையும், அந்த மாண்புறு காட்சியைக் காணவும், அவர் உரை கேட்கவும் வாரீர் என்று மகிழ்ச்சியோடு வரவேற்புக் குழுவினர் கூவி அழைப்பதில் பொருள் இருக்கத்தானே செய்யும்!

மாநாட்டைத் தலைமை நிலையச் செயலாளரான தோழர் மதியழகன் துவக்கிவைக்க, தோழியர் சத்தியவாணி முத்து எம். எல். ஏ. கலைக் கண்காட்சியைத் திறந்து வைக்கிருர். தோழர் மதியழகனைப் பற்றி நாடு அறியும்! உருவத்தே சிறியவராயினும் விசாலமான மனமும், விரிந்த சிந்தையும், பரந்த உள்ளமும், பார்ப்போரை ஈர்க்கும் பண்பும், படித்த காலமுதல் கழகத்துக்குப் பாடுபட்ட தழும்பும், நிரம்பிய தண்மதியாவார் மதியழகன், அஞ்சா நெஞ்சமும் அரிமா நோக்கும் அக்கிரமத்தைக் கண்டிக்கும் ஆற்றலும், ஆதித்திராவிடப் பெருங்குடியினரே! அறியோமோ நம்மை ஆட்டிப் படைத்து கீழ் நிலைக்குத் தள்ளிய கேடு கெட்ட சமூகத்தை? அதன் சர்வாதிகாரத்தினின்றும் மீள—சமூக விடுதலையும், பொருளாதார சமுத்துவமும், சுரண்டலற்ற அரசும் பெற—நாமெல்லாம் இருக்கவேண்டிய இயக்கம் இஃதன்றே?' என்று எடுத்துரைக்கும் மகளிர் மன்றத்தலைவி, சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களைப்பற்றி நாமா எழுதவேண்டும்?

"இருக்கின்ருர் இதோ பாரும்! எமது கொள்கைப் பரப்பும் குன்றத்து விளக்குகளை!!" என்று மாற்ருருக்கு எடுத்துக்

---

| அடுத்த 'அறப்போர்' இதழ்! | மாநில மாநாட்டு மலராக 22-7-61 அன்று வெளிவரும்! | பக்கம்: 28 விலை: 50-காசுகள் |
|---|---|---|

**மாநாட்டு நிகழ்ச்சிகள்! பேச்சுக்கள்! புகைப்படங்கள்!!**

**பொதுச்செயலாளர் - செ[illegible]ளர்களின் 'கருத்தரங்கம்'**

| பொருளாளரின் தனிக்கட்டுரை- 'திராவிடம்' பற்றிய அரிய குறிப்பு. | அரங்கண்ணல் தீட்டும் "நான் கண்ட அண்ணு" |
|---|---|

**இல்லந்தோறும் உள்ளந்தோறும் மணக்கும் அறிவு மலர் இது!**

முன்பணம் அனுப்பிய விற்பனையாளர்களுக்கே மலர் அனுப்பப்படும். கழிவு நீக்கி, மலருக்குரிய தொகையை 14-ந் தேதிக்குள் அனுப்பிடல்வேண்டும். பிறகு வருந்தற்க.

—பொறுப்பாளர்

---

எமது இலட்சியம் விலைகொடுத்து வாங்கும் சரக்கா, தூங்கி விழித்ததும் போய்விடக்கூடிய கனவா, கையிலெடுத்ததும் கரைந்துவிடக்கூடிய பனிக்கட்டியா? இல்லை! இல்லை! உறுதியான கொள்கை எம்முடையது. உருவாகக்கூடிய கொள்கை. உருப்படாது—உருவாகாது—ஒதவாது—கூடாது — தேவையில்லாதது — முட்டாள்தனமானது-காட்டுமிராண்டிகள் கேட்பது—என்கிற வசைமொழிகளை நேரு பண்டிதர் போன்ருர் நித்தம் நித்தம் பேசியும் வாடாத கொள்கையா, வம்புப் பேச்சுக்கும், வஞ்சக சூழ்ச்சிக்கும வாடிடப்போகிறது?

சாந்த முகம்! காந்தக் கண்கள்! கத்திரித்து விடப்பட்ட மீசை! எவரையும் கத்தரித்து விடுவது போலப் பேசாத உதடுகள்! காவியேறிய பல்! அந்தப் பல்லைப் போட்டிக் கிழுக்கும் உடை! உடையெப்படி யிருப்பின் என்ன தமிழ் நடையைப் பார் என்று சொல்லாமல் சொல்லும் அகன்ற நெற்றி! அங்கே அடிக்கடி ஏறி இறங்கும் புருவம்! சீவப்படாத தலை! ஓய்வில்லாத மூளை! பேச்சோ பலாச்சுளை! இதயமோ அன்பின் வலை!!—என்று நாட்டுப் பெரியவர்கள் போற்றிடும் நமது மாபெருந்தலைவராம் அறிஞா அண்ணு அவர்கள், இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கப் போகிருர்கள். தம்பிகளைத் தலைவராக்கிப் பார்த்து மகிழவேண்டிய தயாளர், 'இடைச் செருகல்' செய்து கழகத்தல் ஏதோ செய முனைந்தவர்களைக்கண்டு ஆபத்து வந்துவிடக்கூடாதே என்றஞ்சி, "அப்பா சம்பி, சம்பத்! நீ அவைத்தலைவனுயிரு. நான் உனக்குக்கீழ்ப் பொதுச்செயலாளனுயிருக்கிறேன்," என்று முன் வந்தார். அந்தப் பெருந்தன்மையின் பிம்பம், கூறுமளவில், பேச்சாளர்கள் வரிசையினைப் பெரிதாகப் பெற்றவர்களன்ரே நாம்? திசையெல்லாம் ஓடி தி, மு. க, இலட்சியம் பரப்பும் அத்திநவிளக்குகள் புதுமுறுக்கோடு பூத்திடும் மலர்களாக வந்து கலந்துகொள்ளப்போகின்றனர்! அறிவு பெய்யும் மழையென—விடுதலை உணர்வு பெருக்கெடுத்தோடும்—முரசின் முழக்கமும், தமிழின் சுவையும், நாம் தலைநிமிர்வதற்கு வேண்டிய வழிவகைகளும் கிடைக்கும் மதுரை மாநாட்டில்!!

குன்றெடுக்கும் தோளுண்டு! தோளிலே தொத்தும் தோகை மயில்களுண்டு! அம்மயில்கள் களிநடனமிடக் காவுண்டு! அக்காவிலே கூக்கூவெனக் கூவிடும் குயில்களுண்டு! குயில்கள் கூவ 'என்னவோ ஏதோ' வென்று மிரண்டோடும் மானுண்டு! அம்மான் ஓட, அதைக்கண்டு மெய்சிலிர்த்த பாவலர் உண்டு! அப்பாவலர் உள்ளத்திலிருந்து எழும் உணர்ச்சியைக் கொட்டிட அழகுமொழி உண்டு! அம்மொழியால் உதிர்ந்த கவிதையின் நயத்தை உரைத்து மகிழும் நாவலருண்டு! பாவலரும் நாவலரு போற்றும் நட்டுவப் பெருமகனுருண்டு! அவர்கண்ட அங்க அசைவினைக் கற்று, தானுடும் போது மன்றமெலாம் ஆடிடச்செய்த நடனமணிகள் பலருண்டு! "தாம் தீம்" என்று அவர்கள் ஆட, அதற்கான தாளமும் பண்ணும் கலந்து உலகையே மெய்மறக்கச் செய்யும் குழலும் யாழும் மத்தளமும் கலந்த இசை உண்டு!

எது இல்லை நம்மிடம்? நாடா! காடா! காவுரு! மாநதியா! கனித்தோப்பா! கூத்தா! கவிதையா! அக்கவிதைக்கு இலக்கணம் வகுத்த மொழியா!—என்ன இல்லை எம்மிடம்? ஆட்சி முறையா, நீதியளிக்கும் நெறியா, வாணிபமா, அதற்கான நாவாயா, ஆடை நெய்தலா, அணிகலன் செய்தலா. தங்கம் எடுத்தலா, அத்தங்கத்துகுள் வைக்கத் தேவையான முத்தா, அந்த முத்தை எடுப்பதற்கு மூச்சடக்கி கடலுக்குள் மூழ்கிவரக்கூடிய வீரரா!!—

எவை யில்லை எம்மிடம்? பலாப்பழத்தினது கொட்டைகளை விட்டு விட்டு சுளைகளைத் தின்றன, குரங்கினங்கள்; அவை உதிர்த்தப் பலாக் கொட்டைகள் எம்மருங்கும் சிதறிக்கிடக்குமாம்! அந்தப் பலாப்பழத்தின் நறுமணம் பரவிய மலைச்சாரலிலே, பன்றியைக் கொன்று இழுத்து வருதல் மூலம், புலால் நாற்றமும் போட்டியிட்டு எழும்படிச் செய்யுமாம் புலி!

அப்புலி செல்லும் பாதையிலே, ஒருபக்கம், வாழைக்காட்டிலே, வாழையினை உண்ண வந்த களிறு தவறி குழியில் விழுந்து தவித்து எழ அருகிலிருக்கும் அகிலையும் தேக்கையும் தன் அம்கையால் இழுக்குமாம்! அம்மரங்களில் பற்றிப்படர்ந்த முல்லை மலர் அதுபோது மழைத்துளியென உதிர, யானை விழுந்த குழியில் மலர்ந்த குமுத மலரும் முல்லையும் ஒன்றேடொன்று முத்தமிட்டுக் கொள்ளுமாம்!!—

"அடச்சரிதானப்பா, இதெல்லாம் உன் தமிழிலே பாடப்பட்டிருக்கும் வரிகள், இதைக்காட்டியோ நீ திராவிட நாடு பெறப்போகிருய்? தமிழ் நாடு கேள் சரி!—

என்று சறுக்குப் புத்தியும் முறுக்குக் குணமும் கொண்ட சிலர் கேட்பார்கள். அவர்கள் கேட்டிடும் வேளையில், உண்மைதானே—நாமுரைப்பது நந்தமிழ்ப் பெருமைதானே, அறிவோமா தெலுங்கு, உணர்வோமா மலையாளம், கற்றதில்லையே கன்னடம், இவை அத்தனையும சேர்ந்ததன்ரே திராவிடநாடு? இது அமைதல் சாத்யமோ!—என்று நமக்கு, ஐயம் எழாது. ஏனெனில், மானும் புலியும், வாழைத் தோட்டம் சென்று வழியில் சிக்கிய யானையும், முல்லையும் குமுதமும் முத்தமிட்ட வாவியும் கொண்டதாக நாடு விளங்கியபோது அதன் எல்லை இப்போதுள்ள 'சென்னை இராசதானி' அல்ல! சென்னப்பனிடமிருந்து பறங்கியர் பெற்று உண்டாக்கிய இன்றுள்ள சென்னைமாநகர், அப்போது ஓர் சிற்றூர்—அதுகாலை திரு அல்லிக்கேணியும், திருவொற்றியூரும், திருமயிலையும்தான் ஊர்களே ஒழிய, சென்னை அல்ல!! அப்போது தமிழ் மாநிலம்—தமிழ் நாடு, என்கின்ற பெயர் இல்லாவிடினும்—இப்பொழுது நாம் திராவிட நாடு எனக்குறிப்பிடும் எல்லை வரையிலும்—ஏன்? அந்த எல்லைக்கு அப்பாலும்—பரவிக் கிடந்தது. அதுசமயம் அந்த நிலத்தில் வாழ்ந்தோர் பழகிய மொழி தெலுங்குமல்ல, மலையாளமுமல்ல, கருநாடகமுமல்ல, துளுவுமல்ல—தமிழ்தான்!

ஆம்!, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு, இன்றைக்கு மும்மொழி பேசுவோராயிருப்பாரெல்லாம் பேசியது, தமிழ்தான்!!

எப்படிப்பட்ட தமிழ்—இப்போது நாம் பேசுகின்ற இதே தமிழா—இல்லை, கொஞ்சம் 'கொடுந்'தமிழா—ஒலியில் பேதமுள்ள தமிழா—என்பீரேல், சிந்தனைக்குரியதே ஒழிய, அங்கிருந்தோரெல்லாம் தமிழினைப் பேசியோரென்பதைச் சரிதம் அறியாதானே மறுப்பான்.

என்னய்யா கூத்து? எங்கே போயிற்று அந்தத் தமிழ்! இப்போது மும்மொழிகளன்ரே உள்ளது! தெலுங்கும், மலையாளமும், கன்னடமும் எப்படி ஏற்பட்டது? அது தெரியுமா உனக்கு!— என்பார்கள். ஆத்திரத்தையும் அவசரத்தையும் கொண்டவர்கள்! ஆம், எப்படித் தமிழ் போய், மும்மொழிகள் மலர்ந்தன என்பதற்கு நாம் காரணங்கள் கண்டுபிடிக்கத் தேவையில்லை. ஏற்கனவே, கண்டுபிடித்து எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிருர்கள். இப்போதும் அந்த ஆராய்ச்சிகளை ஒப்பிட்டு, தமிழுக்கும் ஏனைய மொழிகளுக்கும் இடையிலுள்ள ஒப்புரவுகளை அறிஞர் அப்பாதுரையார் போன்ருர், கண்டும் உரைத்தும் வருகிருர்கள். அந்தளவுக்குக்கூட வேண்டாம்! தெலுங்கரின் பேச்சை நாம் புரிந்துகொள்ளலாம் — கன்னடத்தார் நாம் பேசினுல் புரிந்து கொள்ளலாம்—இரண்டையும்விட எளிது மலையாளம்! தமிழ் மொழி பேசிய மக்களிடையே வடமொழி நுழைந்தது. மதவாடை ஏற்பட்டதால், மார்க்க போதர்களுடைய மொழியாக வடமொழி கருதப்பட்டது. அப்படி வடக்கிலிருந்து நுழைந்த "மத—மாச்சரிய" உணர்வுக்காரர்களால் வடக்கிலிருந்தோர் முதல் பலியாயினர்! அவர் தம் மொழியுடன் வடமொழி இணைந்து, புதியதொரு மொழி பூத்து தெலுங்காயமைந்தது. அதே போல கன்னடமும், முளைத்தது. கன்னடத்துக்கும், தெலுங்குக்கும் எழுத்திலும் பேச்சிலும் அவ்வளவு வேற்றுமை கிடையாது.

ஆனுல், மலையாளத்தில் இரண்டு மொழிகளையும்விடத் தமிழ்ச் சொற்கள் அதிகம்! தென்பகுதியிலிருந்ததால், இது கொஞ்சம் தப்பியது போலும்—மொழி போதுமோ? நால்வரும் ஒன்றெனக் கூறுவதற்கு வேறென்ன சான்றுண்டு? என்று சங்கநாதம் செய்கிருர்கள் புதுத் தலைவர்கள்! அழுது அழுது, ஆதாரங்களைக் காட்டிக் காட்டி, இத்தனை நாளும் நாம் இதற்குப் பதில் சொல்லியே வருகிரேம். இதே பழைய பல்லவியை இவர்களை இன்னும் பாடவைப்போம், இன்றைய அரசின் அட்டூழியங்களை இவர்கள் எடுத்துச்சொல்லாமல் தடுப்போம என்கிற தந்திரப் புத்தியின் விளைவு இது! காங்கிரசாதிக்கந்திடம் பெறத் துடிக்கும் கைக்கூலிக்காகப் பேசுகிற பேச்சு! எனவே இவை

களை ஒதுக்கிவிட்டு, நம்முடைய எதிர்கால வேலையென்ன என்பதிலே நாட்டம் கொள்ளவேண்டும். இதற்கான நல்வழிகளைச் சொல்லப் போவது மதுரை மாநாடு!

குபேரர்களுக்கு ஓட்டல்களுண்டு கூடிப்பேச—மதவாதிகளுக்கு விழாக்கள் உண்டு, மகிழ்ந்து திரும்ப—நமக்கு, ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளவும், "என்னண்ணு நலமா?"

"என்னக்கா! போன திருச்சிக்குப் பிறகு எத்தனை மழலை மன்னர்கள் உனக்கு?" என்று மகிழும் கொத்துமலர்கள் நாம் என்று கலந்து பேசி களிப்பைப் பெறவும் நமக்குள்ள இடம் பொதுமாநாடு! இதுவே ஏழைகளாகிய நமக்கு விழா! களிப்பு நாள்! திருத்தினம்!—

எனவே, நாட்டின் நரம்புகளாகப் பாடுபடும் நல்லோரே—எமது பெரியோரே—தொழிலால் உலகு செய்யும் தூய்மையான தோழர்காள்! எல்லோரும் வாருங்கள் மதுரைக்கு—குடும்பத்தோடு வாருங்கள்—குலவிளக்குகளோடு வாருங்கள்—வயதான தாய் தந்தையரையும் அழைத்து வாருங்கள்—நண்பர்களையும் இட்டு வாருங்கள்—நாமெல்லாம் ஓர் குடும்பம் என்பதைக் காட்ட வாருங்கள், வாருங்கள்! வாழ்விலோர் நாள்—மதுரை மாநாடு. இலட்சியத்திரு நாள். இன்ப பூமிகாண ஏற்றமிகு தோழர்கள் சூளுரை எடுத்துக் கொள்ளும் உயரிய நாள்—நான்கு நாட்கள்! மாண்புறு நாட்கள்! மகிழ, தெளிவுபெற, திட உறுதி ஏற்க திரண்டிடுவீர், மதுரை! முழக்கிடுவோம் இதயகீதம்! முன்னேற்ற உலகம் சமைக்கும் விழிகளே—இருளடைந்த நாட்டின் ஒளிகளே—ஒன்று சேர்ந்து வாரீர்! வாரீர்!!

5-ம் பக்கத் தொடர்ச்சி

மிஸ்டர் ஆபிரகாமுக்கு 'ஆயிரம் ரூபாய்' லஞ்சம் தருவதாகச் சொன்னான்! அவர்கள் செலுத்தும் முப்பது ரூபாய்க்குப்பதில் யாராவது ஒரு கடைகாரனுக்குக் கொடுத்தால் முன்னூறு ரூபாய் வருமே. ஆயிரம் ரூபாய்!! என்றதும் ஆபிரகாமுக்கு ஆனந்தமாயிற்று. பேசாமல் பணத்தை வாங்கிக்கொண்டு காலிசெய்துகொண்டிருந்தான்.

மாலையில் லீலா வந்தபோது என்ன செய்ய முடியும் லீலா? கல்கத்தாவில் எங்கோ ஒருபகுதிக்குப் போய்ச் சேர்ந்தார்கள்! அதனால் லீலாவை அங்கே காண முடியவில்லை கமலாவுக்கு. இருந்தாலும் இந்தக் கல்கத்தாவுக்குள் ஒருநாள் அவளைக்கண்டு பிடிக்காமலாப் போகப் போகிறோம் என்கிற நம்பிக்கையில் ஓட்டலொன்றில் 'ரூம்' எடுத்துக்கொண்டு தங்கினான்! அவனுடைய செலவழிக்கும் தன்மையையும், பெரிய மனப்போக்கையும், அரட்டையையும் கண்டு சில வாலிபர்கள் நண்பர்களாகக் கிடைத்தார்கள்! பகலெல்லாம் டிராம, பஸ் என்று அலைவான். இரவு வந்ததும் இந்த நண்பர் குழாத்துடன் நன்ருகக் குடித்துவிட்டு (கல்கத்தாவில் மது விலக்குக் கிடையாது) அரட்டைகள் அடிப்பான்! ஒருநாள் பேசிக் கொண்டிருந்தபோது அமெரிக்க டைரக்டர் ஒருவர் தயாரித்த ஒரு திருடனைபற்றிய படத்தை பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன சார் பெரிய விஷயம்? இப்ப நீங்க சொல்லுங்க! எந்த வீட்டிலேபோய் எந்த பொருள் எடுத்துக்கொண்டு வரவேண்டும். இது ஒரு பெரிய காரியமா? நானேபோய், எடுத்துக்கொண்டு வருகிறேன்..." என்று ஒருபோடு போட்டான்.


நண்பர்கள், "அதெப்படி முடியும்! திருடுவதுஎன்ருல் அதற்குத் தனி சாமார்த்தியம் வேண்டும். பார்த்தீங்களா படத்தில்? அவன் எப்படித்தாவினுன், பூட்டியிருந்த கதவை எப்படித் திறந்தான், அதெல்லாம் நமக்கு வருமோ?" என்றனர்.

"ஏன் வராது! பந்தயம் பிரதர்! இன்னைக்கு ராத்திரியே நான் ஒரு வீட்டிற்குள் போய்விட்டு அந்த வீட்டுக் கதவில் நான் வந்ததற்கு அடையாளமாக ஒரு குறியும் வைத்துவிட்டு வருகிறேன். அப்படி வந்தால் என்ன தருவீர்கள்?" என்று சவால் விட்டான் கமலா.

"அப்படிப் போய் வெற்றி கண்டீங்கன்ணு, நாளைக்குவிஸ்கியோடு விருந்து," என்ருர்கள் நண்பர்கள்.

அவர்கள் போனதும், குடி போதையிலிருந்த கமலாவின் மனதில், தான் விட்ட சவாலே சுழன்றது. அதே யோசனையில், பலகணி பக்கமே கண்களைத் திருப்பியபடி இருந்த கமலாவின் கணகளில் ஒரு உருவம் மெள்ள ஏறித் தன் அறைக்குள் வருவதாகத் தெரிந்தது! பேசாமல் உட்கார்ந்திருந்தான் கமலா. வியப்போடு!! வந்த உருவம் தன்கையில், பெரிய பிச்சுவாவைப் பிரித்து எடுத்துக்கொண்டு, கமலாவை நோக்கிப் பாய்ந்தது,

(தொடரும்)



வெளி நாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டுத் தாயகம் திரும்பிய மேயர் முனுசாமி அவர்களை கழகத் தலைவர்கள் விமானத்தளத்தில் வரவேற்றக் காட்சி. **'அயல் நாடுகளில் ஐம்பது நாள்'** எனும் தலைப்பில் மேயர் அவர்கள் நமது அறப்போரின் அடுத்த இதழ் முதல் தொடர்ந்து எழுத இருக்கிருர்!!


** வெளிவந்துவிட்டது! **

அறிஞர் அண்ணு அவர்களின் கருத்தோவியம்

**'கம்பரசம்'**

(2-ம் பாகம்) விலை- 50 காசுகள்.

விபரங்கட்கு: சுகுமாரன் பதிப்பகம்; 80-சி. எஸ் செட்டித் தெரு, சின்னக்காஞ்சீபுரம்.

குறிப்பு: விற்பனையாளர்கள் பிரதி ஒன்றுக்கு 12 காசுகள் கழிவுபோக முன்பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

# புத்திமாறியோரே புள்ளிவிபரம் காணீர்!

# நீதியிருக்குது குரலிலே! மூச்சிலே!!

## தென்னகம் பெற்றது என்ன?

இந்தியத் துணைக்கண்டம் விடுதலை பெற்ற பின்னர் நம்மை ஆளும் வடநாட்டு அரசு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 2200 கோடியும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 4800 கோடியும் ஆக 7000 (ஏழாயிரம்) கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது. இதில் நமக்கு—தென்னகத்திற்கு 1750 கோடி ரூபாய் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் கிடைக்கவில்லை. ஏனெனில் வடநாட்டு அரசில் இன்று பெரும்பான்மையோராக இருப்போர் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்தான். இவர்கள் கையில் ஆட்சியின் கடிவாளம் சிக்கியதால் தங்கள் தங்கள் மாநிலங்கட்கு வேண்டியதைத் தட்டிக் கொண்டு போய் விட்டனர். இன்னும் வங்காளியர் மராட்டியர், பஞ்சாபியர் போன்றோர் — உணர்ச்சிமிக்கவர்கள். தங்களுக்குச் சரியான முறையில் நீதி கிடைக்காவிட்டால் கட்சி வேறுபாடு அனைத்தையும் மறந்து இனவழிகூடி—ஒரு கட்சியினராய்ப் போராடி வேண்டியதைப் பெற்றுவிடுகின்றனர்.

இன்று இந்தியாவில் இருக்கும் சர்க்கரை ஆலையில் 100—ச்கு 85—பங்கு வடநாட்டில்தான். அதுவும் உத்தர பிரதேசத்தில் தான். இந்தியாவிற்கு முழுதும் வேண்டிய பெனிசிலினையும் கொடுத்து, அண்டை நாடுகட்கும் ஓரளவு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவு மிகப்பெரிய பெனிசிலின் தொழிற்சாலை பிம்பிரியில். அதேபோல் மாபெரும் உரத் தொழிற்சாலை சிந்திரியில்! எண்ணற்ற நன்மைகளை வடக்கே பெரும்பான்மை காரணமாகவும் ஒற்றுமை காரணமாகவும் பெற்று வருகின்றனர். நாம் அன்று ஏமாந்ததுபோல் இன்றும்—ஏதாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்க இருக்கின்ற அறுபத்திரண்டிலும் ஏமாந்தவர்களாக இருக்க வழிவகுத்துக் கொண்டிருக்கின்றோம்.

இங்குள்ளோர் சுய நலத்திற்காகவும்—பதவிப் பேராசைக்காகவும் தங்கள் தங்களுக்கென ஒவ்வொரு கட்சியை அமைத்துக் கொள்ளுகின்றனர். ஒவ்வொரு குடும்பமும் இரண்டு மூன்று கட்சிகளைத் துவக்கி வாழ்க்கை நடத்தவும் தென்னகத்தைக் குட்டிச் சுவராக்கவும் திட்டமிடுகின்றன. இந்நிலையைத் தமிழக மக்களும் எப்படியோ ஏற்றுப் போற்றுகின்றனர் — ஆதரவும் தருகின்றனர்.

ஆனால் மற்ற மாநிலங்கள் கட்சி வேற்றுமைகளை மறந்து தங்களது வளர்ச்சிக்கான ஆக்கப் பணியினைச் செய்ய முன்வருகின்றனர். அப்படி இல்லையென்றால்—கடந்த பதிமூன்று ஆண்டுகளாக நாம் இரும்பாலை கேட்டுக் கொண்டிருக்கின்றோம் — அதை அலட்சியம் செய்துவிட்டு, நான்காவது இரும்பாலையை — 200 கோடிச் செலவில் பீகாரைச் சேர்ந்த பொகாராவில் அமைப்பாரா?

இதுமட்டுந்தானா? இன்னும் நாம் எத்தனை வகைகளில் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம். என்பதையும் பாருங்கள்.

முதலில் திட்டங்களிலும் வடவரசு நீர்ப்பாசன வகைக்குச் செலவு செய்த தொகையும்—

## தென்னவன்

வடக்கிற்கும் — தெற்கிற்கும் கிடைத்த அளவினையும் பாருங்கள்.

திட்டத்தின் பெயர். அமைக்கப்பட்டிருக்கும்மாநிலம். தொகை கோடிக் கணக்கில்.

1. பாக்ரா நங்கல் பஞ்சாப் 195 கோடி.
2. தாமோதர் அணை 110
3. ஹீராகுட். ஒரிசா 70 கோடி
4. மஞ்சகண்ட் ஒரிசா 36 கோடி
5. மகாநதி ஒரிசா 15 கோடி
6. ரிகண்ட் உ. பி. 45 கோடி
7. யமுனா, உ. பி. 20 கோடி
8. கொய்னா பம்பாய் 43 கோடி
9. கடானா பம்பாய், 14 கோடி
10. காச்சி நபாரா பம்பாய் 12 கோடி
11. கோசி அணை பீகார் 45 கோடி
12. பொகாரோ (மின்சார நிலையம்) 15 கோடி
13. கங்கை அணை மேற்கு வங்கம் 25 கோடி
14. மயூராசி மே. வ. 16 கோடி
15. சம்பல் திட்டம், ம. பி. 48 கோடி
16. தாவா ம். பி. 18 கோடி
17. கோர்பா (மின்நிலையம்) ம. பி. 18 கோடி
18. கோடா ராசச்கான் 26 கோடி,
19. பஞ்சட் குன்று ராசஸ்தான் 18 கோடி
20. துர்க்காபூர் அடைப்பு 10 கோடி
21. மைதான் அணை 17 கோடி
22. கோனார், ராசஸ்தான் 10 கோடி.

### தெற்கே:

1. துங்கபத்திரா பெல்லாரி—ஆந்திரா 25 கோடி.
2. நாகார்சுனா பெல்லாரி—ஆந்திரா 75 கோடி.
3. ஆரணியாறு பெல்லாரி—ஆந்திரா 1 கோடி.
4. ஐராவதி மைசூர் 23 கோடி.
5. பத்தா மைசூர் 22 ,,
6. கீழ்பவானி சென்னை 10 கோடி.
7. பெரியாறு சென்னை 7 கோடி.
8. குந்தா சென்னை 35 கோடி.
9. மணிமுத்தாறு சென்னை 8 கோடி.
10. மாலம்புழா திரு-கொச்சி 5 கோடி.
11. வாலாயாறு திரு-கொச்சி 1 கோடி.

1951-ஆம் ஆண்டுக்கு முன்னால் இந்தியா முழுவதிலும் 2500 குழாய்க் கிணறுகள் இருந்தன. அவற்றில் உ. பி. யில் மட்டும் 2300 கிணறுகள் இருந்தன. அதன் பின்னர் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. ஆனால் தென்னகத்திற்கு ஒரு கிணறுகூட கிடைக்கவில்லை இதோ விவரம்:


| | | | |
|---|---|---|---|
| 1. | பீகார் | 809 | கிணறுகள். |
| 2. | உ. பி. | 3095 | ,, |
| 3. | பஞ்சாப் | 936 | ,, |
| 4. | பெப்சு | 590 | ,, |
| 5. | பம்பாய் | 400 | ,, |
| | மொத்தம் | 5830 | ,, |

தெற்கே 000 பட்டைநாமம்.

அடுத்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்ட விவரம் காணீர்:

### வடக்கே:

| | | | |
|---|---|---|---|
| 1. | அசாம் | 50 | கிணறுகள் |
| 2. | பீகார் | 150 | ,, |
| 3. | பம்பாய் | 330 | ,, |
| 4. | ம. பி | 98 | ,, |
| 5. | ஒரிசா | 25 | ,, |
| 6. | பஞ்சாப் | 466 | ,, |
| 7. | உ. பி. | 1500 | ,, |
| 8. | மே. வங் | 150 | ,, |
| 9. | இராசஸ்தான் | 50 | ,, |




## மதனமண்டபம்

ஆசிரியர்: முல்லைசத்தி

விலை ரூ 3—50

உள்ளத்தைத் தூண்டும் வண்ண அட்டையுடன் உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கும் பதிமூன்று சிறுகதைகள் கொண்ட நல்ல முயற்சி. ஒவ்வொரு கதையிலும் தோழர் முல்லை சத்தி, தனக்கென்று ஏற்படுத்திக்கொண்டிருக்கும் அழகு நடையுடன், கதைக்குரியவர்களை உலவவிட்டிருக்கிறார். நடையும் நிகழ்ச்சிப் பின்னலும் சேர்ந்து, உயர்ந்த வெளிநாட்டு சிறுகதை இலக்கியங்களோடு ஒப்பிடுமளவில் இந்நூல் விளங்குகிறது.

தமிழில் சிறுகதை எழுதும் ஆற்றலுடையோர் குறைவு எனக்கூறுவோர், இந்நூலையும் சத்தியின் ஆற்றலையும் கண்டால் தமது எண்ணத்தை மாற்றிக் கொள்ளவே செய்வர். இது போன்ற இலக்கியப் படைப்புகளில் தோழர் சத்தி, இன்னும் முனைவாராக. தமிழன்னைக்குப் பல மலர்மாலைகளைத் தொடுத்து அணிவித்து, அதன் மணம் கண்டு, நாடெல்லாம் மகிழும்படி செய்வாராக

கிடைக்குமிடம்:
கே. ஆர். நாராயணன்,
12-மாடல் ஹன்சுன்ரோடு,
சென்னை -15.

## முக்கனி

பன்மொழிப்புலவர் ப. சுந்தரவேலனார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இலக்கியத் திங்கள் இதழ் பேராசிரியர் அ. மூ. பரமசிவானந்தம், கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றோரின் அரிய கருத்தோவியங்கள் இடம் பெற்றுள்ள இந்த இதழின் விலை 25 காசுகள்.

இந்த ஏட்டினைக் கொணரும் தென்னவன் சிறந்த ஊக்கமும் தமிழாற்றலும் மிக்கவர் என்பதால், எடெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கிறது.

முகவரி: முக்கனி,
8 வேலர்ஸ் ரோடு, சென்னை-2

| | | |
|---|---|---|
| 10. சௌராட்டிரா | 20 | ,, |
| 11. டில்லி | 50 | ,, |
| மொத்தம் | 2888 | ,, |

## தெற்கே:

| | | |
|---|---|---|
| சென்னை | 300 | ,, |
| பாண்டிச்சேரி | 50 | ,, |
| ஆந்திரம், கொச்சி | — | ,, |
| | | ,, |
| மொத்தம் | 350 | ,, |

இரு திட்டங்களிலும் தோண்டிய கிணறுகள் 11,570. அதில் நமக்குக் கிடைத்தவை 350. உ. பி.க்குக் கிடைத்தவை 6895. இந்தியாவில் வெட்டிய கிணறுகளில் பாதிக்குமேல். அடுத்துத் தொழிற்றுறையைப் பார்க்கலாம்:

## வடக்கே:

| | |
|---|---|
| 1. சிந்திரி உரத் தொழிற்சாலை | 110 கோடி |
| 2. ரூர்கேலா இரும்பாலை | 170 கோடி |
| 3. பிலாய் ,, | 131 கோடி |
| 4. துர்காபூர் ,, | 138 கோடி |
| 5. பாஞ்சி கனரக இயந்திரத் தொழிற்சாலை | 200 கோடி |
| 6. கனரக மின்சாரத் தொழிற்சாலை | 90 கோடி |
| 7. பம்பாயில் உத்சீர் அலுமினியத் தொழிற்சாலை | 25 கோடி |
| உ. பி. ,, | 5 கோடி |
| மொத்தம் | 869 கோடி |

இவை சரியாகப் புள்ளி விவரம் தெரிந்தவை. புள்ளி விவரம் தெரியாமல் இன்னும் எத்தனையோ உள்ளன. எண்ணெய் சுத்திப்ரிம்பு ஆலை-ட்ராம்பே அணுவுலை சித்தரஞ்சன் இன்ஞ்சின்தொழிற்சாலை போன்றவையும் உண்டு.

## தெற்கே:

| | கோடி |
|---|---|
| தொழிற்றுறை, பெங்களூர் டெலிபோன் தொழிற்சாலை | 5 |
| பெரம்பூர் ரயில்பெட்டி தொழிற்சாலை | 10 |
| நெய்வேல்நிலக்கரி தொழிற்சாலை | 82 |
| மொத்தம் | 97 |

(நெய்வேலி வேலை இன்னும் முழுவேகத்தில் நடைபெறவில்லை)

அடுத்து போக்குவரத்துத் துறையை பார்த்தோமானால் நம் உள்ளம் கொதிக்கும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போக்குவரத்திற்காக ஒதுக்கிய தொகை 1385 கோடி. அதில் தென்னகத்திற்குக் கிடைத்தது மிக மிகக் குறைவு.

| இதோ: | கோடி |
|---|---|
| சென்னைக்கு | 8.75 |
| ஆந்திரம் | 5.50 |
| கேரளம் | 3.17 |
| கன்னடம் | 4.75 |
| மொத்தம் | 22.17 |

தான் கிடைத்தது. இதைவிட தென்னகத்திற்கு இன்னும் மிகவும் மோசம் செய்திதுறை, ரயில் வேத்துறை. புதிதாக புகைவண்டிப் பாதை 842 மைல்கள் அமைத்த திட்டதித்ல் தென்னகத்திற்கு ஒரு மைல்கூட கிடையாது. ஆனால் சென்னை அரசு மட்டும் பதின்மூன்று புதிய பாதைகள் வடவரசிடம் கேட்டது ஆனால் பெயருக்கேனும்-தமிழகத்து அமைச்சர்களை மதிக்க வேண்டு மென்பதற்காகவாவது ஒரு பாதையைக்கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் ஒரு மைல் நீளப்பாதை போடக்கூட விரும்பவில்லையே - வஞ்சக வடவரசு.

வடக்கே போடப்பட்ட ரயில் பாதையான திட்டத்தின் பெயர்களும், பாதை போடப்பட்ட பகுதியும், போடப்பட்ட நீளமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. பெரேசட்-பசீரட் கிழக்கு இருப்புப் பாதை 44 மைல்.
2. ரூர்கலா-தால்தி தெ. கி. இ. பாதை 30 மைல்.
3. பர்க்காகான் - பிர்மித்ராபூர் தெ. கி. இ. பாதை 124 மைல்.
4. நௌமுந்தி - பன்சாபரணி தெ. கி. இ, பாதை 18மைல்.
5. பிலாய்-தாலிராசுகரா தெ.கி இ. பாதை 60 மைல்,
6. கூவா-மனோகர்பூர் தெ. கி. இ. பாதை 30 மைல்.
7. கான்பூரா-ராம்கார்க் தெ. கி இ. பாந்தை 75 மைல்.
8. மத்திய நிலக்கரிச் சுரங்கம் மத்திய-இந்திய ரயில்வே 125 மைல்.
9. கொர்பா விஸ்தரிப்பு ம.இ.ர. 5 மைல்.
10. குணு உச்சயின் ம. இ. ர. 175 மைல்.
11. ராபர்ட்கன்ஜ் - கர்வாரோடு வ. இ. பாதை 100மைல்
12. முசாப்பர்பூர்-தர்பங்கா வ. இ. பாதை 35 மைல்.
13. ராம்செய்-பின்னுகுரி வ. இ. பாதை 20மைல். வடக்கே போடப்பட்ட பாதை மொத்தம் 42 மைல். தெற்கே 8000 பட்டை நாமம்.

இம்மட்டோகொடுமை? இல்லை இன்னும் நீளுகின்றது, தென்னகத்தாரை ஏய்க்கும் படலம்.

ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனம் தனது பொருள்களை பல்வேறு துறைகளிலும் முதலீடு செய்தது பற்றி ஒரு குறிப்பு வெளியிட்டுள்ளது. அக்குறிப்பில் வடநாடு பெற்ற வளத்தினையும், தென்னாடு பெற்ற தீமையையும் நாம் நன்கு உணர முடியும்! இதோ விவரம்: பஞ்சாலைத் தொழில்களில் அந்நிறுவனம் செய்த முதலீடு:

## வடக்கே

| | இலட்சங்கள் |
|---|---|
| பம்பாய்க்கு | 290.38 |
| டில்லிக்கு | 75.22 |
| உ. பிக்கு | 70.01 |
| ம. பிக்கு | 50.05 |
| மே. வங்க்த்துக்கு | 47.11 |
| மொத்தம் | 532.77 |

## ஆனால் தெற்கே:

| | |
|---|---|
| சென்னைக்கு | 118.16 |
| மைசூருக்கு | 20.23 |
| ஆந்திரம் | 8.14 |
| கேரளத்து | 1.69 |
| மொத்தம் | 148.22 |

அடுத்து மின்சாரத் தொழிலுக்கு ஒதுக்கியதில்,

## வடக்கே

| | இலட்சங்கள் |
|---|---|
| பம்பாய்க்கு | 556.82 |
| மே. வங்கத்துக்கு | 162.35 |
| உ. பிக்கு | 62.04 |
| பீகாருக்கு | 28!51 |
| வடக்கிற்கு மொத்தம் | 809.72 |

அதே நிறுவனம் தெற்கிற்குத் தந்த தொகை இதோ:

## தெற்கே

| | இலட்சங்கள் |
|---|---|
| சென்னைக்கு | 12.72 |
| மைசூருக்கு | 00.25 |
| ஆந்திரா | 00.55 |
| கேரளத்திற்கு | 00.03 |
| | 14.12 |

இன்னும் பாருங்கள் இயந்திரத் தொழில் துறைக்கு ஒதுக்கிய விவரத்தை:

## வடக்கே:

| | இலட்சங்கள் |
|---|---|
| பம்பாய்க்கு | 120.60 |
| மே. வங்கத்துக்கு | 465.07 |
| பீகாருக்கு | 98.67 |
| மொத்தம் | 684.34 |

## தெற்கே:

சென்னைக்கு மட்டும் 23.64 ஏனைய மாநிலங்கட்குக் கிடையாது.

ஆயுள் இன்சூரன்சு நிறுவனம் வடக்கே குறிப்பிட்ட நாலைந்து மாநிலங்கட்கு ஒதுக்கிய தொகையையும், தெற்கே நான்கு அல்லது மூன்று மாநிலங்கட்கு ஒதுக்கிய தொகையையும் நாம் கவனித்துப் பார்த்தால் நமக்குத் தருவது நாம் பிழைத்துப் போகட்டும் என எண்ணிப் பிச்சையிடுவது போல் இல்லையா? ஏக இந்தியா பற்றிப் பேசுவோரும், வடக்கே வாழவில்லை. தெற்கும்தேயவில்லை என்று பேசுவோரும் இப்புள்ளி விவரங்களைக் கவனித்த பின்னராவது திருந்துவார்களா? தாய்த் திரு நாட்டிற்குத் துரோகம் செய்யாதுஇருப்பார்களா? அரசியலில் இருந்துகொண்டு ஏதாவது முன்னுக்குப் பின் முரணைப் பேசிக் காலத்தைத் தள்ளும் தீய போக்கினை மாற்றிக் கொள்வார்களா?

இன்றுவரை இன்சூரன்சுக் கழகத்தில் அதிகமான மக்கள், அதிகமான தொகைக்கு இன்சூரன்சு செய்திருப்பது தென்னக மக்கள்தான். ஆனால் வஞ்சகரால் புறக்கணிக்கப்படுவதும் தென்கை மக்கள்தான். ஐயோ தென்னகமே இதுவா உன்கதி?

வடவரசில் வீற்றிருப்போருக்கு வங்கம்-பம்பாய், உ. பி., ம. பி., பீகார் போன்ற குறிப்பிட்ட சில மாநிலங்கள் தான் கண்ணுக்குப் புலப்படுகின்றது! இவைதான் அனைத்து இந்தியாவின் மாநிலங்களா? ஏனைய மாநிலங்களும் அவர்கட்குத் தெரியவில்லையா? அவையனைத்தும் இந்தக் கொள்ளையர் ஆட்சியில் பாழடைந்து போக வேண்டியதுதானா? தேசியத்தார் இதை உணரவில்லையா?

தமிழகம் மட்டும் ஆண்டுஒன்றுக்கு 80 கோடிக்குமேல் வடவரசிற்கு வரியாகக் கொட்டிக் கொடுக்கின்றது. பதினைந்து ஆண்டுகளில் சுமார் 1200 கோடி கொடுத்திருக்கிறது!! இதுபோல் ஏனைய தென்மாநிலங்களும் வரியாகத் தங்கள் பங்கினைக்கொடுக்கின்றன. வடவரசு வரியைப் பெறும்போது ஏக இந்தியா எனப் பேசுகின்றது. ஆனால் வாயில் போடும்போது மட்டும்குறிப்பிட்ட மாநிலங்கட்கு அதிக சலுகைகள் காட்டுகின்றது. இக்கொள்கைகளைத் தெரிந்த பின்னரும்வடநாடு வாழவில்லை-தென்னாடு தேயவில்லை எனத் துணிந்துகூறும்நம் நாட்டுக் கங்காணிகளைக் என்னவென்றுகூறுவது! வடவரசுதென்னகத்தை ஏமாற்றுகின்றது; என்பதை மேலே காட்டியுள்ள புள்ளி விவரங்களைக் கண்ட பின்னரும் தி. மு. கவின் உண்மை விளக்கம் பொய் என்று கூறுவாரா பொய்யர்கள்?

சேலத்து இரும்பாலையைப் பற்றி நிமிடத்துக்கு நிமிடம் நாம் கேட்டுக் கொண்டிருக்க நம்மை அலட்சியம் செய்துவிட்டு, நான்காவது இரும்பாலையையும்பொகாராவில் ரூபாய் இருநூறு கோடியில் வடவரசு துவக்குகின்றதே-எஎவளவு துணிவு இருந்தால்—இன்னும் ஏமாற்று நம்மை! வடவருக்கு இத்தகைய துணிவு வரக் காரணம் என்ன?

தென்னகத்தின் நந்நலத்தில் அக்கறை கொண்டோரே! மேற்கண்ட புள்ளிவிவரங்களை மீண்டும் ஓரிரு முறை படித்துப்பாருங்கள். அப்போது உங்கள் உள்ளம் கொதிக்கும் கலமாகமாறும். அப்போது அந்த உணர்ச்சியை-தென்னகத்தின் நலனுக்கு விரைவில் நன்மை கிட்டும் வழியைத் தேடப் பயன்படுத்துங்கள். தென்னகத்தின் முன்னேற்றத்தில்உண்மையான அக்கறை கொண்டு உழைப்போருக்கு ஆதரவைக் கொடுங்கள்.

நாளுக்கு ஒரு கொள்கையோடு வரும் தமிழ்த் தேசியத்தாரின் ஏமாற்றுப் பேச்சில் காலத்தை வீணாக்கி-நம் வெற்றிப்பாதையின் முன்னேற்றத்தைக் குறைத்துக் கொள்ளக்கூடாது!

முன்னால் காட்டியுள்ள புள்ளி விவரங்களை நீங்கள் படித்ததோடு அமையாது - தேசியம் பேசும் தோழர்கட்கும் காட்டுங்கள்—பார்த்துத் திருந்தினால் அவர்கள் வரலாற்றில் நல்ல இடம் பெறுவர்...!!

—0—

2-ம் பக்கம் தொடர்ச்சி

எப்படிக் கருதிற்ரோ, அதே கருத்தை, ஆலைகளும் விஞ்ஞானமும் வளர்ந்தயுகத்திலும் எண்ணிணன் ஹிட்லர்!

எவ்வளவுதான் விஞ்ஞானமும் புதுமைக் கண்டுபிடிப்புகளும்உலகில் உண்டானாலும் அவைகளை அனுபவிக்கின்ற மனிதனுடைய உள்ளம், செம்மையானதாயிருக்கவேண்டும்! மனதைஉலைக் கூடமாக வைத்துக்கொண்டு உயர்ந்த வாழ்வை அனுபவித்து என்ன பயன்? எல்லோரும் மனிதர்கள்தான்—அப்படி மலர்க்குவியலில் ஒன்று வெள்ளையாகவும் மற்றொன்று சிவப்பாகவும் இருக்கிறதோ, அதைப்போல மனிதர்களிலும் நிறமும் தோற்றமும் வேறுபட்டிருக்கக்கூடும் — அதற்காக, அவர்களைக் கீழானவர்கள் கேடுகெட்டவர்கள் என்று கருதுவது? மேட்டுக்குடியினர் அப்படிக் கருதினால் உடனே கோடுப் பெறும்வாழ்வினர் அவர்களைஎதிரிகளாக எண்ணுகிறார்கள். இதன் விளைவு இடை யறாத போராட்டம் எப்போதும் நிகழ்ந்து கொண்டு தானே யிருக்கும்!

இப்போதும் பார்க்கிறோமே, தென் ஆப்பிரிக்காவில்? நிறமும், உருவும் மட்டுமின்றி மனிதர்களுக்குள் காழ்ப்பையும் குடைச்சலையும் உண்டாக்கும் மற்றொன்று மதம்! நான் இந்தமதம்-அவன் அந்த மதம் என்பதால், ஏற்படும் பிணக்குகளும் பூசல்களும் ஏராளம்.

மதம் எப்படி ஏற்பட்டது? காட்டுமிராண்டியான மனிதன் கூட்டமாக வாழ ஆரம்பித்தபோது அவனுக்கென்று சிலவரை முறைகள் ஏற்படலாயின! அதை யாரவது 'ஒருவன்' முன்னின்று வகுத்துக் கொடுத்தான். அல்லது அவர்களாகவே தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டமுறைகள் அவர்தம் பழக்க வழக்கங்களாக அமைந்தன. அந்தக் கூட்டத்தினர் பேசுகின்ற மொழி, அவர்களுடையதாக அமைந்தது, விமானமோ, ரயிலோ, காரோ இல்லாத அந்தக் காலத்தில் நூறு மைல்கள் போவதானால்கூட வசதி கிடையாது. ஆங்காங்கே தங்கிய கூட்டத்தினர், ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டபோது, பல கூட்டங்களைப் பரிபாலிக்க நாடு ஏற்பட்டது.

பதினாயிரம், இலட்சம் என்று அந்த நாட்டில் வாழ்ந்த மக்களின் நடையுடை பாவனைகளை ஒழுங்கு செய்ய ஒவ்வொரு 'போதகர்' கிளம்பினர். வியாபாரியான நபிகள் நாயகம் அண்டை அயல் நாடுகளில் வாழுகின்ற மக்களின் முறைகளைக் கண்டதால்தானே அதைபோலத் தன் நாட்டில் காட்டுமிராண்டித்தனமாகவாழும் மக்களைச் செப்பனிட, "மார்க்கம்" கண்டார். இப்படித்தானே, இயேசுவும் புதியமதம் கண்டது. புத்தரும் மகாவீரரும் குருநானக்கும் மற்ற மார்க்க போதகர்களும் இப்படித்தானே உருவாயினர்,

அந்தந்த சூழ்நிலைகளுக்கேற்ப ஆங்காங்கே உருவான மதங்கள் நல்ல நோக்கத்தோடுதான் ஆரம்பத்தில் அரும்பின. ஆனால் மனிதன் மதத்தை நல்ல வழியில் பார்க்காமல், "உயர்வு தாழ்வு" கற்பித்துப் பெருமை கொள்ளப் பயன்படுத்தியதால்தான் இன்னும் மதப் பூசல்களும் மாச்சரியங்களும் ஒயவில்லை! இதெல்லாம் ஒழிந்து மதம் என்றாலும் அன்பென்றாலும் ஒன்றுதான் எனும் நந்நிலை மலரவேண்டும் என்பது தான் அவா! அந்தப் புதுயுகம் அமையுமாயின், புகைச்சலும் பொறாமையும், உலகத்திலேயே இருக்காது! இதுதான் காந்தியடிகள் சொன்ன சர்வோதயம்—அண்ணா சொல்லிடும், குடும்ப பாசம்!!

இந்த நல்மனம் மலர, தடையாயிருப்பது இதயத்தில் ஏற்படும் அசூயையும் ஆத்திரமுமேயாகும். எப்படி 'மனுசாஸ்திரம்' நமது சமுதாயத்தில் பேதங்களைஉண்டு பண்ணும் வகையில் பல சூத்திரங்களைக் கற்பித்ததோ-சூத்திரன் இப்படி இப்படித்தான் வாழ வேண்டுமென்று வரைத்ததோ—அதேபோல, ஹிட்லர் தனது ஜெர்மானியில் யூதர்களை ஒடுக்க ஒரு "மனுக் கோட்பாட்டை" வரையறுத்தான் ஆட்சிக்கு வந்ததும்.

ஸ்ட்ரெய்சர், துந்துபி முழக்கினான் இச்சட்டம் கண்டு! தன் வாழ்நாளின் இலட்சியம் நிறைவேறுவதாகக் குதூகலித்தான்! தேசீய சோஷியலிசத்தின் பிதாக்களில் ஒருவர் என்று சொல்லப்பட்ட ரோசன்பர்க் என்பார் கூத்தாடினார்! யாரார் இனவெறியே இன்பவழி என்று கொண்டு கிடந்தனரோ, அவரெல்லாம் ஆனந்தக் களிப்படைந்த அந்த அநியாயச் சட்டத்தைக் கொஞ்சம் பாருங்கள்!!

*'ஜெர்மன் இரத்தம்' பாழாகாதவாறு பாதுகாக்கும் சட்டம்.*

*1935 செப்டம்பர் 15ல்*

*பிறப்பிக்கப்படுகிறது.*

ஜெர்மன் மக்கள் உலகில் நீடிக்க, ஜெர்மானியருடையஇரத்தத்தோடு எதுவும் கலக்காமலிருப்பது மிக மிகத் தேவையென்பதால்-அப்படிச் செய்தாலொழிட ஜெர்மனி வாழ முடியாதென்பதால்-கீழ்க்கண்ட சட்டம், ஏகமனதாகப் பிரகடனம் செய்யப்படுகிறது.

*1. யூதர்களுக்கும் ஜெர்மானியர்களுக்குமிடையே திருமணங்கள் கூடாது.*

*2. இரகசியமாக யூதரும் ஜெர்மானியரும் ஏதாவது வழிகளில் கலப்பதும் கூடாது.*

*3. யூதர்கள் வீட்டில் எந்த ஜெர்மானியப் பெண்ணையும் வேலைக்கு வைத்திருக்கக் கூடாது,*

*4. யூதர்கள், எங்கள் ஜெர்மானிய சர்க்காரின் தேசீயக் கொடியை ஏற்ற அருகதையற்றவர்கள்.*

எப்படிச் சட்டம் பார்த்தீர்களா! யாருக்குமனம்வரும்? இப்படிப் பிரிப்பதுதான் தேசீயம் என்றனர்! அப்பொழுதுதான் ஜெர்மானியர், கலப்பற்றுஇருப்ப என்றனர்! அக்கம்பக்கத்திலுள்ளவர்களைச் சகோதரனாக மதிக்காதே-அவனைச் சண்டாளனாகவே நினை, அவன் நம் சர்க்காரில் குடியிருக்கவே இலாயக்கற்றவன். அடடா-வெறியென்றால் இதுதான் அசல் வெறி! இப்படியெல்லாம் சட்டம் கிளம்பியதோடா நின்றது? இல்லை! இல்லை!

(தொடரும்)

# குன்றத்திலே கொள்கை வீரர்கள்!

**க. மாணிக்கவாசகம்**

செந்தமிழ் வளர்த்த மாமதுரை—நோக்கி
சீறும் புலிநிகர் வீரரெல்லாம்
எந்தன் திராவிட நாடெமக்கே—என
எக்காள மிட்டுமே செல்லுகின்றார்!

பட்டாளம் போகுது போகுதுபார்—எழிற்
பாண்டிய நாட்டுநம் சீமையிலே
கட்டாயம் திராவிடம் மீட்டிடவே—திட்டம்
காணவே போகுதிம் மாநாடு!

வெற்றி வெற்றியென எட்டுதிக்கும்—பாயும்
வேங்கை நிகர்த்த இளைஞரெல்லாம்
பெற்றவள் அன்னை திராவிடத்தை—மீட்க
பெரும்படையாக செல்லுகின்றார்!

மாவட்டம், வட்டம் சிற்றூறு—எழில்
மங்கிக் கிடக்கின்ற கிராமமக்கள்
போவோம் திருப்பரங் குன்றமென்ற—நடை
போட்டு நடக்கத் துணிந்துவிட்டார்!

நடிப்பிற் கிலக்கணங் கூறுகின்ற—கலை
நல்லறிவாளர்கள் கூடுகின்றார்!
இடிமுழக்கங்கள் நம் பேச்சு—நேரு
இதயத்தை தொட்டிடும் இக்காட்சி!

கண்ணியம், கடமைக் கட்டுப்பாடு—அண்ணா
கட்டளை மீறாத இக்குடும்பம்
எண்ணிய எண்ணம் முடிப்பதற்கே—அதோ
ஏறு நடையிலே கூடுகின்றார்!

உழவர் பெரும்படை ஓர் பக்கத்தில்—உடன்
உழைப்பாளர் கூட்டம் மறுபக்கத்தில்
எழுத்தாளர், கலைஞர், பட்டதாரி—ஏழை
எளியது எல்லாம் நம் மாநாட்டில்!


மதுரை நகர்ப்புற வீதியெல்லாம் - வீர
மாமன்னர் போடும் நடைவீச்சு!
எதிரிகளுக் கெல்லாம் குலைநடுக்கம் - கொள்ள
ஏராளம் ஏராளம் இளைஞர் படை!

மாமறவர்க் கூடும் தேமதுரை - விழா
மணக் கோலமாக காணுதுவாம்
தி. மு. கவின் எதிர்காலம் - அண்ணா
தீட்டியே தருவர் நாட்டினர்க்கே!

மாடு மிரளுது கண்டிதனை - இந்த
மாநில ஆட்சி நடுங்குதுவாம்
ஈடு இணையற்ற மாநாட்டைக் - கண்டு
ஏறிட்டு பார்க்குது வையமெல்லாம்!

# மதுரை

## மாநாட்டுத் திறப்பாளர்



இலட்சியம் இழக்கோம்! என்றும் உழைப்போம்! எனும் தலைமை நிலையச் செயலாளர்.

## கண்காட்சித் திறப்பாளர்



எழுச்சிக் குரல் படைத்த—வீரத் தாய்! வீழ்ந்துபட்ட இனத்தின் உரிமை முரசம்—!!

# கேள்வி பதில்

கே: தங்களை எழுத்தாளர் ஆக்கியது யார்? பத்திரிகாசிரியர் ஆக்கியது யார்? அரசியல்வாதியாக்கியது யார்? திரையுலகுக்கு அறிமுகம் செய்தது யார்?

வீரமணி,
புதூர்.

ப: என்னுடைய நண்பர் சி. நடராசன் என்பவர்! இப்போது மதுரையில் பொறியியல் நிபுணராக யிருக்கிறார். 'குடியரசு' ஏட்டில் என்னை எழுதும்படி செய்தவர் ஆ. திராவிடமணி எனும் நல்லவர்; பிறகு 'முஸ்லீம்' தினசரியில் துணை ஆசிரியனாகயிருந்தேன்; இடந்தந்து ஆதரித்தவர் இப்போதைய முஸ்லீம்லீக்தலைவர் ஸ்மாயில் அவர்களின் இளவல் முகமது இபுராகீம் எனும் பெரியவர். அரசியல் வாதியாக்கியவர் சகோதரர் கருணாநிதி. திரையுலகுக்கு நான் வந்து எழுத வேண்டுமென விரும்பியவர் மறைந்த கலைவாணர் என். எஸ். கே. வாய்ப்பளித்தவர் கவிஞர் கண்ணதாசனின் அண்ணன் ஏ. எல். சீனிவாசன்

* * *

கே: கம்யூனிஸ்டுகளைப் பற்றிய தங்கள் கருத்தென்ன்?

கோவிந்தசாமி,
குனியமுத்தூர்.

ப: அவர்களில் பலருடன் நான் பழகியவன் என்பதால் நன்றாக அறிவேன்! ஒரு நண்பர் 'ஸ்டாலின் கெட்டவர் என்று மாஸ்கோ அறிவித்ததும் தன் பிள்ளையின் பெயர் 'ஸ்டாலின்' என்று இருந்ததை மாற்றினார், அந்தளவுக்கு அவர்களுடைய மனதில், இலட்சிய பூமியாக இரஷ்யா இருக்கிறது. இதனால், இங்குள்ள நிலைமைகளை அவர்கள் அவ்வளவாக மதிப்பதில்லை. அதை வைத்தே, இதை மதிப்பிடுகின்றனர். இதனால் அடிக்கடி அவர்கள் முன்பு போற்றியதைப் பின்பு தூற்ற நேருகிறது!

* * *

கே: தங்கள் 'அறப்போர்'ப் படித்துவிட்டு த. தே. கட்சித்தலைவர் ......உங்களைச் செருப்பால் அடிக்க வேண்டுமென்றார்?!

யாசீம்,
திருவல்லிக்கேணி

ப: நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்களோ அதே தலைவர், அப்படிச் சொன்னதாக அவர் வீட்டிலிருந்த நபரே என்னிடம் சொன்னார். அதனாலென்ன! கழகத்தின் கொள்கையை ஈட்டி கொண்டு குத்தும்போது நான் செருப்பால் அடிபடுவதா பெரிய விஷயம?

* * *

கே: இந்நாட்டு உதய சூரியன் யார்?

மணி,
தஞ்சை.

ப: சந்தேகமா அதில்? நமது அறிஞர் அண்ணாதான்!

* * *

கே: ஒட்டு முறையில் வாங்காவிட்டால் வேட்டு முறையில் வாங்குவேன் என்றவர், இன்று திராவிட நாடுகிடைத்தால் அண்ணாவிடம் காலில் விழுந்து மன்னிப்பு கேட்பேன் என்கிறாரே! அதைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ஆ. வெ. சீனிவாசன்,
ஆவுடையார்பாரை.

ப: கவிஞர் கண்ணதாசன்தானே அவர் எதையும் பேசுவார். உடனே மறந்துவிடுவார்

கே: மராட்டியத்தில் த. தே. க—வுக்கு நல்ல வரவேற்பு என்று ஒருவர் தனது ஏட்டில் தீட்டியுள்ளாரே, அப்படித் தேசியம் ஒன்றும் இங்கு தென்படவில்லையே!

நெல்லைத் தமிழ்மன்னன்
சிர்கி—பூனா—3

ப: இப்படிச் சிலர் இங்கே பெருமை பேசுவதாக அங்குள்ளோரிடம் சொல்லுங்கள்! அவர்களும் சிரிக்கட்டும்!!

கே: கவிஞர் கண்ணதாசன் "நூறு கேள்விகள்" கேட்டு மடக்கப் போகிறாராமே தி. மு. கவை!

நக்கீரன்
பள்ளியகரம்

ப: அத்தனை கேள்விகளா வேண்டும், தீதைத் தீதென்று சொல்ல! அவருடைய வெடிகளில் இது ஒரு வகை!! அப்படியே அவர் நூறு கேள்விகள் எழுத உட்கார்ந்தாலும். இருந்து கடைசி வரையில் எழுத முடியாது அவரால். நடுவிலேயே தூங்கி விடுவார் அல்லது ஐம்பதோ அறுபதோ எழுதிவிட்டு நூறு என்றுவாதிப்பார். இப்படி வேண்டாத வேலையில், உண்மையிலாத விஷயத்தில், தலையிட்டுக் கொண்டு, தன், தலையை முட்டி மோதிக் கொள்வதே "போர்வாங்க வழி" என்பது அவருடைய போக்காகும். பொதுவாழ்க்கையில் பணியாற்றிப் பேர் பெறுவதைவிட போகிற போக்கில் நாலுபேர் தினசரி நம்மைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கவேண்டும்; அதுதான் அரசியல் என்பது அவருடைய சித்தாந்தமாகும்! அதனால்தான் அவருடைய எழுத்திலும் போக்கிலும் ஒரு தெளிவும் நிரந்தரக் கருத்தும் இருப்பதில்லை.

—0—

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12-3. வது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6

MEENAKSHI NEWS ... BELLS ROAD